VERITÉ RESEARCH
Strategic Analysis for Asia

VERITÉ MEDIA
Better Media Culture

Supported by

Kingdom of the Netherlands

# தொழில்முறை ஊடகவியலுக்கான ஒரு கையேடு:

## இலங்கையில் பெண்கள், பெண் குழந்தைகள் மற்றும் LGBTQIA+ நபர்கள் குறித்து அறிக்கையிடல்



Image credit: AI-generated illustration

# நன்றிகள்

இக்கையேடு இலங்கையிலுள்ள நெதர்லாந்து தூதரகத்தின் ஆதரவுடன் வெரிட்டே மீடியா அண்ட் பொலிடிக்ஸ் (Verité Media and Politics) நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.

வெரிட்டே மீடியா அண்ட் பொலிடிக்ஸ் என்பது வெரிட்டே ரிசர்ச் (Verité Research) நிறுவனத்தின் ஒரு சிறப்புப் பிரிவாகும். பொதுமக்களின் புரிதலை மேம்படுத்துதல், நம்பகமான தகவல்கள் கிடைப்பதை உறுதிசெய்தல், மற்றும் ஊடகத் துறையைத் தரமுயர்த்துதல் என்ற நோக்கத்துடன் இது 2016 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. ஊடகப் பொறுப்புக்கூறல், அறநெறிசார்ந்த ஊடகவியல், மற்றும் தகவல்களின் உண்மைத்தன்மை ஆகியவற்றில் தொடர்ச்சியாகக் கவனம் செலுத்துவதன் மூலம் இப்பிரிவு தனது நோக்கங்களை முன்னெடுத்துச் செல்கிறது.

எதிக்ஸ் ஐ (Ethics Eye), FactCheck.lk, த டிவைட் (The Divide), மற்றும் மீடியா ஓனர்ஷிப் மொனிட்டர் – ஸ்ரீ லங்கா (Media Ownership Monitor – Sri Lanka) ஆகிய தனித்துவமான பொதுச் சேவை மற்றும் கல்வித் தளங்களின் ஊடாக, வெரிட்டே மீடியா அண்ட் பொலிடிக்ஸ் ஊடக அறிக்கையிடலின் தரத்தை மேம்படுத்தவும், தவறான மற்றும் போலியான தகவல்கள் பரவுவதைத் தடுக்கவும், மொழி ரீதியிலான துருவமுனைப்புக்குத் தீர்வுகாணவும், மற்றும் ஊடக நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிக்கவும் பணியாற்றுகிறது.

இவ்வாய்வுக் குழுவில் தேஷித கதிரகொன்ன, கிரிஷாரி டி அல்விஸ், சஜினி விக்ரமசிங்க, மற்றும் தெருனி ரணதுங்க ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இக்கையேடு மஹோஷதி பீரிஸால் எழுதப்பட்டு, முதலில் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. தீபாஞ்சலி அபேவர்தன மற்றும் கலாநிதி நிஷான் டி மெல் ஆகியோர் இதற்கான ஆசிரியர் வழிகாட்டுதலை வழங்கினர். சிங்கள மொழிபெயர்ப்புகளை ரத்திகா பெர்னாண்டோ மற்றும் தீபாஞ்சலி அபேவர்தனவும், தமிழ் மொழிபெயர்ப்புகளை எட்வேட் உதயதாஸ் மற்றும் ரொஷெல் கனகசபை ஆகியோரும் செய்தனர். வடிவமைப்புப் பணிகள் முஆத் ஹிமாஸ்ஸினால் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், இக்கையேட்டை மெருகூட்டுவதற்காக வரைவுகளை மீளாய்வு செய்யவும், கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளவும், பின்னூட்டங்களை வழங்கவும் முன்வந்த அனைத்து ஊடகத் துறை முன்னோடிகளுக்கும், ஏனைய தரப்பினருக்கும் ஆய்வுக் குழு தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

**பரிந்துரைக்கப்படும் மேற்கோள்:** Verité Media and Politics. (2026). *A Handbook for Professional Journalism: Reporting on Women, Girl-children, and LGBTQIA+ Individuals in Sri Lanka.* Verité Research.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

# பொருளடக்கம்

**அறிமுகம் ........ 5**

ஊடகத்தின் நோக்கும் வகிபாகமும்........ 5

ஊடகங்களின் தாக்கம் ........ 5

ஏன் இந்தக் கையேடு? ........ 6

அறிக்கையிடலில் மீண்டும் மீண்டும் நிகழும் போக்குகள் ........ 6

இந்தக் கையேடு எவற்றை உள்ளடக்குகின்றது? ........ 7

இந்தக் கையேடு எவ்வாறு உருவாக்கப்பட்டது? ........ 8

பாதிப்பைக் குறைத்தல்: வழிகாட்டுதல்களின் பின்னணியிலுள்ள அடிப்படைக் கொள்கை ........ 9

**அத்தியாயம் 1: பாலினப் பிரதிநிதித்துவம் குறித்த அறிக்கையிடல் ........ 11**

1.1 பெண்களின் தொழில்முறைத் தகுதி அல்லது தொழில்நுட்பத் திறனைக் குறைத்து மதிப்பிடும் இழிவுபடுத்தும் சொற்களைத் தவிர்க்கவும் ........ 11

1.2 ஒத்த சூழ்நிலைகளில் ஆண்களிடமும் பெண்களிடமும் வெவ்வேறு கேள்விகளைக் கேட்பதன் மூலம் பாலின ஒரேமாதிரியான சித்தரிப்புகளை (stereotypes) வலுப்படுத்த வேண்டாம் ........ 14

1.3 பெண்களைப் பகுத்தறிவற்றவர்களாகவோ, தாழ்ந்தவர்களாகவோ அல்லது திறமையற்றவர்களாகவோ சித்தரிக்கும் இழிவுபடுத்தும் வெளிப்பாடுகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும் ........ 15

1.4 பெண்களைப் பாலியல் ரீதியாகச் சித்தரிப்பதையோ அல்லது அவர்களின் தோற்றத்திற்குத் தேவையற்ற முக்கியத்துவம் அளிப்பதையோ தவிர்க்கவும் ........ 17

1.5 பெண்களுக்கான அல்லது பெண்கள் அதிகம் ஈடுபடும் பணிகளுக்கான காலாவதியான அல்லது இழிவுபடுத்தும் தொழில்முறைச் சொற்களைத் தவிர்க்கவும் ........ 18

சுருக்கம் — பாலினப் பிரதிநிதித்துவம் குறித்த அறிக்கையிடலுக்கான சரிபார்ப்புப் பட்டியல் ........ 20

**அத்தியாயம் 2: பாலியல் நோக்குநிலை மற்றும் பாலின அடையாளம் குறித்த அறிக்கையிடல் ........ 22**

2.1 எதிர்மறையான சூழல்களில் மட்டும் LGBTQIA+ அடையாளத்தை முன்னிலைப்படுத்துவதன் மூலம் எதிர்மறையான அடையாளச் சித்தரிப்பைத் (profiling) தவிர்க்கவும் ........ 22

2.2 அவதூறுகள், கேலி செய்தல் மற்றும் "அசாதாரணத்தன்மை" குறித்த மொழியைத் தவிர்க்கவும் ........ 25

2.3 LGBTQIA+ நபர்களைச் சித்தரிக்கும் போது மரியாதைக்குரிய காட்சிகளைத் தேர்ந்தெடுக்கவும் ........ 27

சுருக்கம் — பாலியல் நோக்குநிலை மற்றும் பாலின அடையாளம் குறித்த அறிக்கையிடலுக்கான சரிபார்ப்புப் பட்டியல் ........ 27

**அத்தியாயம் 3: பாலியல் வன்முறை குறித்த அறிக்கையிடல் ........ 28**

3.1 கலாச்சார ரீதியாக இயல்பானதாகக் கருதப்பட்டாலும், களங்கப்படுத்தும் அல்லது இழிவுபடுத்தும் சொற்களைத் தவிர்க்கவும் ........ 28

3.2 பாலியல் வன்முறையைச் சாதாரணமானதாகக் காட்டுவதையோ அல்லது பரபரப்பாக்குவதையோ தவிர்க்கவும் ........ 30

3.3 தப்பிப்பிழைத்தவரின் (survivor) அடையாளத்தைப் பாதுகாக்கவும் ........ 31

3.4 வெளிப்படையான விளக்கங்களைத் தவிர்க்கவும்; பொருத்தமான இடங்களில் தூண்டுதல் எச்சரிக்கைகளை (trigger warnings) பயன்படுத்தவும் ........ 33

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

3.5 பழி சுமத்துவதைத் தவிர்க்கவும் மற்றும் பொறுப்புக்கூறலைக் குற்றவாளியின் மீது நிலைநிறுத்தவும் ............33

3.6 தப்பிப்பிழைத்தவர்களை உதவியற்றவர்களாகச் சித்தரிப்பதைத் தவிர்க்கவும் ..................................................35

3.7 பின்னணிச் சூழலை வழங்கவும் மற்றும் வாசகர்களை ஆதரவுச் சேவைகளுடன் இணைக்கவும் .......................36

சுருக்கம் — பாலியல் வன்முறை குறித்த அறிக்கையிடலுக்கான சரிபார்ப்புப் பட்டியல் .............................................37

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

# அறிமுகம்

## ஊடகத்தின் நோக்கும் வகிபாகமும்

சிறந்த ஊடகவியல் பொது நலனுக்காகச் சேவை செய்கிறது: இது பொது வாழ்க்கையில் பங்கெடுக்கவும், பல்வேறு கருத்துக்களை மதிப்பிடவும் மற்றும் அதிகாரத்தில் இருப்பவர்களைப் பொறுப்புக்கூறச் செய்யவும் தேவையான துல்லியமான தகவல்களை மக்களுக்கு வழங்குகிறது. ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம் (United Nations Educational, Scientific and Cultural Organisation/UNESCO) இந்த ஜனநாயகச் செயல்பாட்டைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் வரைவிலக்கணப்படுத்துகிறது. சிறந்த ஊடகவியல் அரசாங்கத்தின் பொறுப்புணர்வையும் பொதுமக்களின் ஈடுபாட்டையும் வலுப்படுத்தும்.[1] இந்த பொதுச் சேவை நோக்கமானது, தொழில்முறை ஊடகவியலாளர்கள் சங்கத்தின் (Society of Professional Journalists/SPJ) நெறிமுறைத் தொகுப்பு மற்றும் சர்வதேச பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பின் (International Federation of Journalists/IFJ) உலகளாவிய நெறிமுறை சாசனம் போன்ற முக்கிய தொழில்முறை தரநிலைகளிலும் பிரதிபலிக்கிறது. இந்த நெறிமுறைகள், தகவல்கள் சேகரிக்கப்பட்டு வெளியிடப்படும் விதத்தில் பொறுப்புணர்வு, சுதந்திரம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை வலியுறுத்துவதோடு, பொதுமக்களின் தெரிந்துகொள்ளும் உரிமையையும் ஊடகவியலில் உறுதிப்படுத்துகின்றன.[2]

ஊடகங்களில் சித்தரிக்கப்படும் விதத்தால் பொதுமக்களின் அவதூறுக்கும் அல்லது தனிப்பட்ட விளைவுகளுக்கும் ஆளாகக்கூடிய வாய்ப்புள்ள நபர்களைப் பற்றி செய்தி வெளியிடும்போது, ஊடகத்தின் அந்தப் பங்கு இன்னும் முக்கியத்துவம் பெறுகிறது. இலங்கையில், பெண்கள், பெண் குழந்தைகள் மற்றும் LGBTQIA+ சமூகத்தினர் முறையான கவனமின்றி செய்திகளில் சித்தரிக்கப்பட்டால், அவர்கள் துன்புறுத்தல், புறக்கணிப்பு, சமூகக் கண்காணிப்பு மற்றும் பழிவாங்கல்களைச் சந்திக்க நேரிடும்.[3] அத்தகைய செய்திகள் பொதுமக்களின் புரிதலையும் பொறுப்புணர்வையும் விரிவுபடுத்தலாம் அல்லது பாரபட்சத்தை ஆழமாக்கி அவர்களுக்குத் தவிர்க்கக்கூடிய பாதிப்புகளை ஏற்படுத்தலாம். இதனால்தான் "பொது நலன்" என்பதைப் பொதுமக்களின் ஆர்வம் சார்ந்தது என்று மட்டும் சுருக்கிவிட முடியாது: ஒரு விவகாரத்தைப் பொதுமக்கள் புரிந்துகொள்ளத் தேவையானவற்றை வெளியிடும் அதேவேளையில், பாதிப்புகளைக் குறைத்தல் மற்றும் ஆபத்தில் இருப்பவர்களைப் பாதுகாத்தல் போன்ற தொழில்முறை கடமைகளைச் செயல்படுத்துவதே தலையங்க முடிவாகும்.[4]

## ஊடகத்தின் தாக்கம்

செய்தி நிறுவனங்கள் (newsrooms) ஒவ்வொரு நாளும் எந்தக் கதைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் (agenda-setting - நிகழ்ச்சி நிரலைத் தீர்மானித்தல்) மற்றும் அந்தச் செய்திகள் எவ்வாறு சொல்லப்பட வேண்டும் (framing - கட்டமைப்பு செய்தல்) என்பது குறித்து முடிவுகளை எடுக்கின்றன[5] இந்தத் தெரிவுகள் மிகவும் முக்கியமானவை: பொதுமக்கள் எவற்றைக் கவனிக்கிறார்கள், பொதுவாக மக்கள் எவ்வாறு சிந்திக்கிறார்கள், மற்றும் குறிப்பிட்ட நிகழ்வுகள் மற்றும் சிக்கல்களை அவர்கள் எவ்வாறு புரிந்துகொள்கிறார்கள் என்பதை இவை வடிவமைக்கின்றன.[6]

இந்தக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாளக் குழுக்களைப் பொறுத்தவரை, இத்தகைய முடிவுகள் நிஜ வாழ்க்கையில் நேரடி விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். இலங்கையில் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள், LGBTQIA+ தனிநபர்கள் மற்றும் பாலியல் வன்முறையிலிருந்து மீண்டவர்கள்/பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் போதுமான அளவு பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதில்லை அல்லது தவறாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறார்கள்; அல்லது எதிர்மறையான பிம்பங்கள் ஊடான சித்தரிப்புகள் (stereotypes) மூலம் காட்டப்படுகிறார்கள். ஊடகங்கள் ஒரு சில குறிப்பிட்ட கதைகளைத் தொடர்ந்து முன்னிலைப்படுத்தும் போது (உதாரணமாக: வன்முறைக்கு உள்ளாகும் பெண்களைப் பற்றிய பரபரப்பூட்டும் செய்திகள் மற்றும் LGBTQIA+ அடையாளங்கள் குறித்த அவதூறான சித்தரிப்புகள்), அதே சமயம் மற்றவற்றுக்குக் குறைந்த இடத்தையே வழங்குகின்றன (பெண்களின் நிபுணத்துவம் மற்றும் தலைமைத்துவம், LGBTQIA+ தனிநபர்களின் அன்றாட வாழ்வியல் உண்மைகள் அல்லது முறையான பாகுபாடுகளை

1 UNESCO, ஊடகவியலாளர் அபிவிருத்தி குறித்த மூலோபாய உரையாடல், ஜனநாயகம் மற்றும் அரசியல் பங்கேற்பை மேம்படுத்துவதில் ஊடகவியலின் பங்கை உறுதிப்படுத்துகிறது (2023)<https://www.unesco.org/en/articles/strategic-dialogue-journalism-development-affirms-role-journalism-promoting-democracy-political > 15 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

2 தொழில்முறை ஊடகவியலாளர்கள் சங்கம், ஒழுக்கக் கோவை (1973) < https://www.spj.org/wp-content/uploads/2024/08/spj-code-of-ethics.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

3 பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் கொழும்பு மற்றும் போக்கஸ் விமன் (FOKUS WOMEN), அறிக்கை: பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை குறித்த இலங்கையின் தேசிய செயல் திட்டத்தின் மூலம் மோதல் தொடர்பான பாலியல் வன்முறை சார்ந்த சமூகக் களங்கத்தை கையாளுதல் (2017)< PSVI report Sri Lanka > 6 ஏப்ரல் 2026 அன்று பார்க்கப்பட்டது. <https://assets.publishing.service.gov.uk/government/uploads/system/uploads/attachment_data/file/645640/SV_Workshop_Report_-_Sri_Lanka.pdf> 27 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

4 ibid.

5 மேக்ஸ்வெல் மெக்காம்ப்ஸ் மற்றும் டொனால்டு ஷா, 'மக்கள் ஊடகங்களின் விவாதப் பொருளை நிர்ணயிக்கும் செயல்பாடு' (1972) 36 பப்ளிக் ஓப்பினியன் குவார்டர்லி 176.

6 ibid.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

ஆராயும் அறிக்கையிடல்கள் போன்றவை). இது, இந்தச் சமூகத்தினர் யார் என்பது குறித்த பொதுமக்களின் பார்வையை மாற்றியமைப்பதோடு, எந்தப் பிரச்சினைகள் நியாயமானவை அல்லது அவசரமானவை எனக் கருதப்பட வேண்டும் என்பதிலும் செல்வாக்கு செலுத்துகின்றன.

இலங்கையின் ஊடகச் சூழல் இத்தகைய போக்குகளைத் தெளிவாகக் காட்டுகின்றது. குற்றம் மற்றும் பொழுதுபோக்குச் செய்திகளில் பெண்கள் அடிக்கடி இடம்பெறுகின்றனர், ஆனால் பெரும்பாலும் அவர்கள் எதிர்மறையான ஒத்தப்பண்புச் சித்தரிப்புகள் (stereotypes) மூலமே காட்டப்படுகின்றனர். அவர்கள் வழக்கமாகப் பாதிக்கப்பட்டவர்களாகவோ, வில்லிகளாகவோ அல்லது எதிர்மறையான பிம்பங்களுக்குள் சுருக்கப்பட்டோ காட்டப்படுகின்றனர்—அதே சமயம் அரசியல், அறிவியல் மற்றும் வணிகம் தொடர்பான செய்திகளில் அவர்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இதற்கிடையில், LGBTQIA+ அடையாளங்களைக் கொண்டவர்கள், அவர்களின் அடையாளங்களைப் பரபரப்பாக்கும் கதைகளில் அல்லது அவர்களின் வெளிப்பாடுகளைக் கேலி செய்யும் அல்லது அவர்களின் வாழ்க்கையை ஒழுக்க வீழ்ச்சி அல்லது பிறழ்வின் அடையாளங்களாகக் கட்டமைக்கும் செய்திகளில் மட்டுமே இடம்பெறுகின்றனர். இத்தகைய சித்தரிப்புகள் அந்த இரு சமூகங்களின் முழுமையான யதார்த்தத்தைப் பிரதிபலிக்கவில்லை, ஆனால் பொதுமக்கள் அவர்களை எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் மற்றும் புரிந்துகொள்கிறார்கள் என்பதில் இவை தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

செய்தி வெளியீட்டில் மீண்டும் மீண்டும் தோன்றும் நடைமுறைகளை ஊடகவியலாளர்கள் அடையாளம் காணவும், அவர்களின் தொழில்முறை தீர்மான திறனை வலுப்படுத்தவும் இந்த கையேடு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம், செய்தி வெளியீடு துல்லியமானதாகவும், நியாயமானதாகவும், செய்திகளில் இடம்பெறும் மக்களின் வாழ்வை மரியாதையுடன் அணுகுவதாகவும் இருக்க உதவுவதாகும். இந்த கையேடு ஊடகத் தொழில்முறை நிபுணர்கள் எதிர்கொள்ளும் அழுத்தங்களையும் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், கடுமையான காலக்கெடுகள் இருந்தாலும் கூட, தொழில்முறை தரநிலைகளை தொடர்ச்சியாக பேணுவதற்கும் தவிர்க்கக்கூடிய சேதங்களை குறைப்பதற்கும் உதவும் நடைமுறை கருவிகளையும் இது வழங்குகிறது.

## ஏன் இந்தக் கையேடு?

இந்தக் கையேடு தொழில்முறை ஊடகவியலை (professional journalism) ஊக்குவிக்கிறது. இலங்கை ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்படும் விதம் காரணமாகத் தொடர்ந்து பாதிக்கப்படும் இரண்டு அடையாளக் குழுக்கள் மீது இது கவனம் செலுத்துகிறது: **பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள், மற்றும் LGBTQIA+ தனிநபர்கள்.** இது ஏற்கனவே நடைமுறையிலுள்ள ஒழுக்கக் கோவைகளுக்குப் (codes) பதிலாக அமைந்த ஒன்றல்ல. மாறாக, இலங்கையில் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படைக் கொள்கைகளை எடுத்துக்கொண்டு, அவற்றை உள்ளூர் உதாரணங்களுடன் அன்றாடப் பணிகளுக்கான நடைமுறை வழிகாட்டுதல்களாக மாற்றுகிறது.

இலங்கையில் ஏற்கனவே பல ஊடக ஒழுக்க நெறிமுறை கட்டமைப்புகள் உள்ளன, ஆனால் அவை பெரும்பாலும் பொதுவானவையாகவும், காலாவதியானவையாகவும் உள்ளன; குறிப்பாகப் பெண்கள் அல்லது LGBTQIA+ சமூகங்களைப் பற்றிச் செய்தியிடுவதற்கான பிரத்யேக வழிகாட்டுதல்கள் அவற்றில் இல்லை. பாலின அடிப்படையிலான வன்முறை, பாலியல் குற்றங்கள் அல்லது பாலின அடையாளம் மற்றும் பாலியல் நோக்குநிலை தொடர்பான செய்திகளை வெளியிடும்போது இந்த இடைவெளிகள் மிகத் தெளிவாகத் தெரிகின்றன.

## அறிக்கையிடலில் மீண்டும் மீண்டும் நிகழும் சிக்கல்மிக்க போக்குகள்

சிங்கள ஊடகங்களைக் கண்காணிப்பதன் மூலம் (குறிப்பாக வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் ஊடக மற்றும் அரசியல் பிரிவின் கீழ் இயங்கும், அறமற்ற மற்றும் சிக்கல்மிக்க செய்திகளை ஆவணப்படுத்தும் Ethics Eye இணையத் தளம் வழியாக), அவசரக் கவனம் தேவைப்படும் மூன்று முக்கியப் போக்குகள் கண்டறியப்பட்டுள்ளன.[7]

a. *எதிர்மறையான, தீங்கு விளைவிக்கும் மற்றும் தவறான ஒத்தப்பண்புச் சித்தரிப்புகள் (stereotypes)*

சில செய்திகள் எதிர்மறையான சித்தரிப்புகளைச் சார்ந்தே அமைகின்றன. இவை உண்மைகளை அறிவதற்கு முன்பே, ஒருவரைப் பற்றி வாசகர்கள் ஒரு முடிவுக்கு வரத் தூண்டுகின்றன. குறிப்பாகப் பரபரப்பூட்டும் குற்றச் செய்திகளில், பெண்கள் பெரும்பாலும் வீட்டுப் பணி செய்பவர்களாக அல்லது "கௌரவமான" பிம்பங்களுக்குள் (tropes) மட்டுமே சுருக்கிக் காட்டப்படுகின்றனர்.[8] அதே சமயம், LGBTQIA+ தனிநபர்கள் "அந்நியப்படுத்துதல்" (othering) மற்றும் அவதூறான சொற்கள் (உதாரணமாக: "இயற்கைக்கு மாறானது", "சாதாரணமற்றது") மூலம் ஓரங்கட்டப்படுகின்றனர். செய்தியுடன் நேரடியாகத் தொடர்பில்லாத இடங்களிலும் அவர்களின் தோற்றம் அல்லது அடையாளம் குறித்துத் தேவையற்ற கவனம்

7 Verité Media, 'Ethics Eye' < www.facebook.com/ethicseye/?_rdc=1&_rdr#> 17 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

8 Verité Media, 'இந்தச் செய்தி உங்களைப் பற்றியதாக இருந்தால், இந்த அறிக்கையிடலை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?' (Facebook, 20 மார்ச் 2024) www.facebook.com/ethicseye/posts/pfbid0rEQYeBL2QbjUfhdvxRBVShd6S1tsuGVePV81R3gz4Pg2mdrY5WsMYCeKC3868b6Ml > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது; Verité Media, 'தாய் தனது குழந்தையைக் கொலை செய்த செய்தி: உணர்ச்சியூட்டும் அறிக்கையிடல்.' (Facebook, 27 செப்டம்பர் 2024)

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

செலுத்தப்படுகிறது.[9]

b. *அதிர்ச்சியை/பாதிப்பை (trauma) சாதாரணமானதாகக் காட்டுதல்*

உள்ளூர் ஊடகங்கள் பெரும்பாலும் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளை, குறிப்பாக பாலியல் துன்புறுத்தல் அல்லது துஷ்பிரயோகம் தொடர்பான சம்பவங்களைக் குறைத்து மதிப்பிடுகின்றன.[10] பெண் குழந்தைகள் சம்பந்தப்பட்ட பாலியல் வன்முறைகள் சில நேரங்களில் மென்மையான சொற்களைக் கொண்டு விவரிக்கப்படுகின்றன; இது இத்தகைய செயல்களின் தீவிரத்தன்மை குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை மழுங்கடிக்கச் செய்வதுடன், வன்முறைக்குள்ளானவர்கள் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் நீதிச் சேவைகளை நாடுவதைக் கடினமாக்குகிறது. குறிப்பாகப் பெண்கள் மற்றும் வயது குறைந்த குழந்தைகள் மீது பழி சுமத்தும் வகையிலான செய்தி கட்டமைப்புகளும் பொதுவானவையாகக் காணப்படுகின்றன.

c. *மொழியின் மூலம் அவதூறுகளைத் தொடரச் செய்தல்*

எதிர்மறையான சித்தரிப்புகளுக்கு அப்பாற்பட்டு, சில செய்திகள் மக்களை அவமானகரமானவர்களாக அல்லது "மனிதத்தன்மை குறைந்தவர்களாக" சித்தரிக்கும் மொழியைப் பயன்படுத்துகின்றன. உதாரணமாக, சிங்களச் செய்திகளில் பாலியல் வல்லுறவு அல்லது துஷ்பிரயோகத்தை விவரிக்க 'தூஷணய' (දූෂණය/dooshanaya - மாசுபடுத்துதல்) அல்லது 'கெலெசீம' (කෙලෙසීම/keleseema - தீட்டுப்படுத்துதல்) போன்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இச்சொற்கள் பாதிக்கப்பட்டவர் "கறைபடிந்தவர்" அல்லது "கெட்டுப்போனவர்" என்று பொருள்படுவதோடு, கவனத்தைக் குற்றத்திலிருந்து திசைதிருப்பிக் பாதிக்கப்பட்டவரின் "தூய்மை இழப்பு" மீது திருப்புகின்றன.

இத்தகைய கட்டமைப்புகள் அவமான உணர்வை வலுப்படுத்துகின்றன, பாதிக்கப்பட்டவர்கள் புகாரளிப்பதைத் தடுக்கின்றன மற்றும் மேலதிக உளவியல் பாதிப்புகளை ஏற்படுத்தும் அபாயத்தைக் கொண்டுள்ளன. அதேபோல், ஒரே பாலின உறவில் இருக்கும் ஆண்களைக் கேலி செய்ய 'சமனலயா' (සමනලයා/samanalaya - வண்ணத்துப்பூச்சி) போன்ற இழிவான சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய மொழி உண்மைகளை விவரிப்பதில்லை; மாறாக அது ஒருவரது அடையாளத்தை எள்ளி நகையாடுவதோடு, பாகுபாடு காட்டுவது ஏற்றுக்கொள்ளத்தக்கது என்ற செய்தியைப் பொதுமக்களுக்கு வழங்குகிறது.

இப்போக்குகள் ஏற்கனவே உள்ள தப்பெண்ணங்களை வலுப்படுத்துவதோடு, இணையத்திலும் நேரடியாவும் துன்புறுத்தல், அவதூறு, நற்பெயருக்குக் களங்கம் மற்றும் நீண்டகால உளவியல் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும். இந்த இடைவெளிகளைக் களைவதற்காகவே இந்தக் கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளது. செய்தியாளர்கள், துணை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், செய்தி தயாரிப்பாளர்கள், ஊடகப் பயிற்சியாளர்கள், கேலிச்சித்திரக் கலைஞர்கள் மற்றும் இணையப் பிரிவு ஊழியர்களுக்கு, நெருக்கடியான நேரக் கெடுவுகளிலும் தொழில்முறைத் தரத்தைப் பேண உதவும் நடைமுறை வழிகாட்டல்களை வழங்குவதே இதன் எளிய நோக்கமாகும். அறிக்கையிடலில் 'பாதிப்பைக் குறைத்தல்' என்பதே இதன் அடிப்படைத் தத்துவமாகும்.

## இந்த கையேடு எவற்றை உள்ளடக்குகிறது?

அடுத்தடுத்த அத்தியாயங்கள், தொழில்முறைத் தீர்மானங்கள் (professional judgement) அதிகம் சோதிக்கப்படும் மற்றும் தவறான அறிக்கையிடலால் அதிக பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ள மூன்று முக்கிய கருப்பொருள் சார்ந்த பகுதிகள் குறித்து கவனம் செலுத்துவதன் மூலம் மேலே குறிப்பிட்ட போக்குகளுக்குப் பதிலளிக்கின்றன:

1. **பாலினப் பிரதிநிதித்துவம் குறித்த அறிக்கையிடல்:** பொது வாழ்வில், தொழில்முறைச் சூழல்களில் மற்றும் அன்றாடச் செய்தி அறிக்கையிடல்களில் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் எவ்வாறு சித்தரிக்கப்படுகிறார்கள் என்பது குறித்த வழிகாட்டுதல்.

2. **பாலியல் நோக்குநிலை மற்றும் பாலின அடையாளம் குறித்த அறிக்கையிடல்:** LGBTQIA+ அடையாளங்கள் எவ்வாறு விவரிக்கப்படுகின்றன, அந்த அடையாளம் எப்போது தேவையானது (மற்றும் எப்போது தேவையற்றது), மற்றும் மொழியும் காட்சிகளும் எவ்வாறு தகவல்களை வழங்குகின்றன அல்லது அவதூறுகளை உண்டாக்குகின்றன என்பது குறித்த வழிகாட்டுதல்.

9 Verité Media, 'மரணமடைந்தவரின் உடை செய்திக்கு அவசியமானதா?' (Instagram, 9 பிப்ரவரி 2024) < www.instagram.com/p/C3IQs68BGZ3/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது; Verité Media, ' "இயற்கைக்கு மாறான நடத்தைகள்" குறிப்பிடப்பட்டுள்ளன, சட்டரீதியான பாலியல் குற்றம் தவிர்க்கப்பட்டுள்ளது.' (Instagram, 15 பிப்ரவரி 2024) < www.instagram.com/p/C3XuPEBBkk6/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது; Verité Media, 'ஒரு சிறுமி பளுதூக்குவதில் என்ன தீவிரத்தன்மை உள்ளது?' (Instagram, 28 மார்ச் 2024)

10 Verité Media, ' "விசித்திரமான ஆங்கிலம்" அல்ல, மாறாகப் பாலியல் துன்புறுத்தல்' (Instagram, 11 டிசம்பர் 2023), < www.instagram.com/p/C0ttNyShfkI/?igsh=MW42cjV0Y3locWs4dA%3D%3D > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது; Ethics Eye, 'விசித்திரமான பாடமா அல்லது பாலியல் துன்புறுத்தலா?' (Verité Media, Facebook, 12 பிப்ரவரி 2024) < www.facebook.com/story.php?story_fbid=365741132883822&id=100083438136844&rdid=VGTH3y2gLfiQNcdV > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

3. **பாலியல் வன்முறை குறித்த அறிக்கையிடல்:** பாலியல் வன்முறை குறித்து எவ்வாறு பொறுப்புணர்வுடன் செய்தியிடுவது என்பது குறித்த வழிகாட்டுதல்—குறிப்பாகப் பாதிக்கப்பட்டவர்கள் கடுமையான அவதூறுகளை எதிர்கொள்ளும் இடங்களிலும், அறமற்ற அறிக்கையிடலால் அவர்கள் மீண்டும் மனஉளைச்சலுக்கு (retraumatise) ஆளாகும் அல்லது அவர்களின் அடையாளம் வெளிப்படுத்தப்படும் அல்லது நீதி கிடைப்பது தடைப்படும் அபாயம் உள்ள இடங்களிலும் இது முக்கியமானது. இந்த வழிகாட்டுதல் பெண்கள், பெண் குழந்தைகள் மற்றும் LGBTQIA+ தனிநபர்கள் சம்பந்தப்பட்ட அறிக்கையிடலுக்குப் பொருந்தும்; அதே வேளையில், பாலியல் வன்முறை அனைத்து பாலினத்தவர்களையும் பாதிக்கிறது என்பதையும், அறிக்கையிடல் எந்தவொரு பாதிக்கப்பட்டவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது என்பதையும் இது அங்கீகரிக்கிறது.

## இந்தக் கையேடு எவ்வாறு உருவாக்கப்பட்டது?

இந்தக் கையேட்டில் உள்ள பரிந்துரைகள் நான்கு முக்கிய பணித் துறைகளின் ஊடாக எட்டப்பட்டுள்ளன:

- *இலங்கை ஊடகங்களில் அறமற்ற அறிக்கையிடல் போக்குகளைக் கண்டறிதல்*

வெரிட்டே ஊடக மற்றும் அரசியல் (Verité Media and Politics) பிரிவின் Ethics Eye தளம் 2016 முதல் சிங்கள ஊடகங்களில் அறமற்ற மற்றும் சிக்கல்மிக்க செய்திகளை ஆவணப்படுத்தி வருகிறது. இது பெண்கள், பெண் குழந்தைகள், LGBTQIA+ தனிநபர்கள் மற்றும் பாலியல் வன்முறைக்குள்ளானவர்கள் குறித்த அறிக்கையிடலில் மீண்டும் மீண்டும் நிகழும் தீங்கு விளைவிக்கும் போக்குகளை வெளிப்படுத்தியுள்ளது. 2022 முதல் 2023 வரையிலான இரண்டு ஆண்டு கால தரவு பகுப்பாய்வு, பரபரப்பூட்டும் குற்றச் செய்திகள், எதிர்மறையான பாலினச் சித்தரிப்புகள் மற்றும் LGBTQIA+ தனிநபர்களைத் தவறாகப் பிரதிநிதித்துவப்படுத்துதல் போன்ற போக்குகளைச் சுட்டிக்காட்டுகிறது. இந்தத் தரவுகள், அன்றாட அறிக்கையிடலில் எங்கு தவறு நடக்கிறது மற்றும் எங்கு மாற்றம் அவசரமாகத் தேவைப்படுகிறது என்பதற்கான இலங்கைக்கே உரித்தான சான்றுகளை வழங்குகின்றன.

- *இலங்கை ஊடக ஒழுக்க நெறிமுறைகளின் அடிப்படை கோட்பாடுகளை ஆய்வு செய்தல்*

இந்த கையேடு இலங்கையில் ஏற்கனவே உள்ள ஊடக நெறிமுறை தரநிலைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. அதில் இலங்கை பத்திரிகைப் பேரவையின் ஒழுக்கக் கோவை (1981), ஆசிரியர் சங்கத்தின் தொழில்முறை நடைமுறைக்கான கோவை (2000) மற்றும் உள்ளூரில் உருவாக்கப்பட்ட பிற நெறிமுறை கோட்பாடுகள் மற்றும் சாசனங்கள் அடங்குகின்றன.[11] இந்த நெறிமுறைகள் பாகுபாடு இல்லாமை, தனியுரிமை பாதுகாப்பு மற்றும் செய்தி வெளியீட்டில் உணர்வுபூர்வ அணுகுமுறை போன்றவற்றை வலியுறுத்தும் இலங்கை சார்ந்த ஒரு அடித்தளத்தை வழங்குகின்றன. இருப்பினும், அவை பல சமயங்களில் காலாவதியானவை, ஒற்றுமையற்ற முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன அல்லது வரம்பான வழிகாட்டுதல்களையே வழங்குகின்றன. குறிப்பாக பெண்கள், சிறுமிகள் மற்றும் LGBTQIA+ நபர்கள் தொடர்பான செய்தி வெளியீட்டில் தெளிவான வழிகாட்டுதல்கள் அவற்றில் குறைவாக உள்ளன.

- *சர்வதேச தரநிலைகளிலிருந்து நல்ல நடைமுறைகளைப் பயன்படுத்துதல்*

சர்வதேச நெறிமுறைகளும் இந்த கையேட்டின் உருவாக்கத்தில் பங்காற்றியுள்ளன. உதாரணமாக, தொழில்முறை ஊடகவியலாளர் சங்கத்தின் (SPJ) நெறிமுறைக் கோவை “சேதத்தை குறைக்க வேண்டும்” என்ற கடமையையும், அனைத்து மனிதர்களையும் “மரியாதைக்குரியவர்களாக அணுக வேண்டும்” என்ற அடிப்படைக் கோட்பாட்டையும் வலியுறுத்துகிறது.[12] ஐ.நா. அமைப்புகள் மற்றும் உலகளாவிய செய்தி நிறுவனங்களின் வழிகாட்டுதல்களும்—குறிப்பாக பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட செய்தி வெளியீடு மற்றும் கவனமான மொழிப் பயன்பாடு தொடர்பான வழிகாட்டுதல்கள்—தேர்ந்தெடுக்கப்பட்ட வகையில் இந்த கையேட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை இலங்கையின் பண்பாட்டு சூழல் மற்றும் சட்ட அமைப்புடன் பொருந்தும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன; மேலும் ஏற்கனவே உள்ள இலங்கை ஊடக ஒழுக்க தரநிலைகளின் மேல் கட்டமைக்கப்பட்டுள்ளன.

- *இலங்கை ஊடகத் தொழில்முறை நிபுணர்களின் பார்வைகளைப் புரிந்துகொள்ளுதல்*

இந்த வழிகாட்டியின் உள்ளடக்கம் ஆசிரியர்கள், செய்தி தயாரிப்பாளர்கள், செய்தியாளர்கள், செயற்பாட்டாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் பாலினம், பாலியல் மற்றும் வன்முறை தொடர்பான துறைகளில் தினசரி பணியாற்றும் சட்ட மற்றும் சுகாதார நிபுணர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவர்களின் கருத்துகள் மொழித் தேர்வு, காட்சிப் பிரதிநிதித்துவம், குற்றச் செய்தி அமைப்பு மற்றும் அச்சு,

11 இலங்கை பத்திரிகைச் சபை, ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்கக் கோவை (1981) < www.mediareform.lk/wp-content/uploads/2020/01/20-Sri-Lanka-Press-Council-setting-out-of-Code-of-Ethics-for-Journalists.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது; இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு, இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்முறைப் பயிற்சி விதிமுறை (ஒழுக்கக் கோவை) (2000) < www.fmmsrilanka.lk/wp-content/uploads/2019/05/2016-Code-of-Professional-Practice_Eng.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

12 Society of Professional Journalists, ஒழுக்கக் கோவை (1973) < https://www.spj.org/wp-content/uploads/2024/08/spj-code-of-ethics.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது. Ibid.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

தொலைக்காட்சி மற்றும் ஆன்லைன் உள்ளடக்கங்களுக்கிடையிலான வேறுபாடுகள் போன்ற மீண்டும் தோன்றும் சிக்கலான பகுதிகளை தெளிவாகக் காட்டின. எனவே, இந்த கையேடு தற்போதைய ஊடக நடைமுறையில் மிகவும் அவசரமாக கவனம் தேவைப்படும் பிரச்சினைகள் குறித்து தொழில்முறை நிபுணர்களே அடையாளம் காட்டிய கவலைகளை பிரதிபலிக்கிறது. அதே நேரத்தில், அவர்கள் அன்றாட செய்தி வெளியீட்டில் பயன்படுத்தக்கூடிய பயனுள்ள வழிகாட்டுதல்களாக இது உருவாக்கப்பட்டுள்ளது.

## பாதிப்பைக் குறைத்தல்: வழிகாட்டுதல்களின் பின்னணியிலுள்ள அடிப்படைக் கொள்கை

இலங்கையில் பெண்கள் மற்றும் LGBTQIA+ சமூகங்களைப் பற்றிய செய்தி வெளியீடு பல நேரங்களில் அவப்பெயர், மனரீதியான பாதிப்பு, வன்முறை, சமத்துவமின்மை மற்றும் சமூக ஆபத்து போன்ற அம்சங்களுடன் தொடர்புடைய தலைப்புகளை உள்ளடக்கியதாக இருக்கும். இந்த சூழலில், இந்த கையேட்டை வழிநடத்தும் தொழில்முறை **கடமை சேதத்தை குறைப்பது என்பதாகும்.**

சேதத்தை குறைப்பது என்பது கடினமான கதைகளைத் தவிர்ப்பதையோ அல்லது செய்தியை மெலிதாக்குவதையோ குறிக்கவில்லை. மாறாக, பாதிக்கப்பட்டவர்களை கவனத்துடனும் பொறுப்புடனும் அணுகுவதைக் குறிக்கிறது. ஒரு செய்தி எவ்வாறு வடிவமைக்கப்படுகிறது, எழுதப்படுகிறது மற்றும் காட்சிப்படுத்தப்படுகிறது என்பதனால், அது அவர்களுக்கு பாதுகாப்பை வழங்கக்கூடும் அல்லது அவர்கள் எதிர்கொள்ளும் சேதத்தை மேலும் அதிகரிக்கக்கூடும் என்பதை உணர்ந்து செயல்படுவதாகும். தொழில்முறை ஊடகவியலாளர் சங்கம் (SPJ) குறிப்பிடுவது போல, “ஒழுக்கமான பத்திரிகையாளித்துவம் மனிதர்களை மரியாதைக்குரிய மனிதர்களாகக் கருதி அணுகுகிறது."[13]

இந்தக் கடமை இலங்கைச் சூழலில் குறிப்பாக மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில், அதன் தாக்கத்தைப் பற்றி சிந்திக்காமல் செய்யப்படும் செய்தி வெளியீடு, பெண்கள் மற்றும் LGBTQIA+ சமூகங்களை தொந்தரவு, கண்காணிப்பு, குடும்ப நிராகரம், வேலை இழப்பு அல்லது உடல் வன்முறை போன்ற ஆபத்துகளுக்கு உள்ளாக்கக்கூடும்—குறிப்பாக அவர்கள் பெயர் குறிப்பிடப்படும்போது, படங்கள் வெளியிடப்படும்போது அல்லது போதுமான கவனமின்றி விவரிக்கப்படும்போது.

இந்தக் கடமையிலிருந்து மூன்று தொடர்புடைய கோட்பாடுகள் உருவாகின்றன; அவையே இந்த கையேட்டின் மீதமுள்ள பகுதிகளை வழிநடத்துகின்றன.

- *பாசமும் கருணையும் – பாகுபாடு அல்ல, தொழில்முறை தீர்மானம்*

கருணை என்பது பெரும்பாலும் புறநிலைத்தன்மைக்கு ஒரு அச்சுறுத்தலாகத் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது.[14] இருப்பினும், சரிபார்க்கப்பட்ட உண்மைகளை அடிப்படையாகக் கொள்ளும்போது அது நெறிமுறை சார்ந்த தீர்ப்பை வலுப்படுத்துகிறது. தேவையற்ற தீங்குகளை ஏற்படுத்தாமல் எவற்றைச் சேர்ப்பது, எவற்றைத் தவிர்ப்பது மற்றும் ஒரு செய்தியை எவ்வாறு கட்டமைப்பது என்பதைத் தீர்மானிக்க இது ஊடகவியலாளர்களுக்கு உதவுகிறது.

நடைமுறை செய்தி அறைச் சூழலில், கருணை என்பது ஒரு எளிய கேள்வியுடன் தொடங்கலாம்.

இந்தச் செய்தி என்னைப் பற்றியதாகவோ அல்லது நான் அக்கறை கொள்ளும் ஒருவரைப் பற்றியதாகவோ இருந்தால், நான் இதைப் இதே வழியில் வெளியிடுவேனா?

அதே நேரத்தில், கருணை “தகவலறிந்த” தாகவும் இருக்க வேண்டும்.[15] பெண்கள் அல்லது LGBTQIA+ நபர்கள் தொடர்பான கதைகளில் வெறும் வேதனையான படம் அல்லது நாடகமயமான மேற்கோள் காட்டுவது மட்டும் போதாது; ஏன் அந்த நிகழ்வு நடந்தது, அது பரவலான ஒரு பிரச்சினையின் ஒரு பகுதியா, அதை மாற்ற என்ன செய்ய முடியும் என்பதையும் பார்வையாளர்கள் அறிய வேண்டும். எனவே கருணை தெளிவான, தொடர்புடைய தகவல்களுடன் இணைந்திருக்க வேண்டும்; அது மக்களுக்கு பிரச்சினையைப் புரிந்துகொள்ளவும் தீர்வுகளைப் பற்றி சிந்திக்கவும் உதவ வேண்டும். இந்த அடிப்படை இல்லாமல் செய்தி வெளியீடு பார்வையாளர்களை அதிர்ச்சியடையச் செய்யலாம், உதவியற்றவர்களாக உணரச் செய்யலாம் அல்லது தவறாக வழிநடத்தலாம்.

- *தனியுரிமை என்பது மரியாதை அல்ல, அது ஒரு அடிப்படை உரிமை*

தனியுரிமை என்பது ஒரு மரியாதை அல்ல; அது ஒரு அடிப்படை நெறிமுறை எதிர்பார்ப்பு. வன்முறையில் இருந்து தப்பிப்பிழைத்தவர்களுக்கும், அனுமதியின்றி அடையாளம் காணப்பட்டால் உண்மையான பாதிப்புகளை

13 ibid.

14 14 ஊடக அறநெறிகளுக்கான மையம், ‘சார்பற்ற ஊடகவியலில் கருணையைப் பயிற்சி செய்தல்’ (விஸ்கொன்சின்-மெடிசன் பல்கலைக்கழகம், 2008) https://ethics.journalism.wisc.edu/2019/04/18/practicing-compassion-in-an-unbiased-journalism/ 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

15 Ethics Eye, ‘பாலின அடிப்படையில் ஒரே மாதிரியாகச் சித்தரிக்கப்படும் தொழில்கள்?’ (Verité Media, Facebook, 16 மார்ச் 2023) < www.facebook.com/share/p/1G-7fjYCdBU/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

எதிர்கொள்ளக்கூடிய LGBTQIA+ தனிநபர்களுக்கும் தனியுரிமை அவசியமானது. அமெரிக்காவின் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தேசிய மையத்தின் (National Center for Victims of Crime) தனியுரிமை மற்றும் கண்ணியத்திற்கான வழிகாட்டி, கவனக்குறைவாகத் தகவல்களை வெளிப்படுத்துவது தனிநபர்களை மீண்டும் அதிர்ச்சிக்குள்ளாக்கலாம் மற்றும் சட்டச் செயல்பாடுகளைக் கூட சீர்குலைக்கலாம் என்பதை வலியுறுத்துகிறது.[16]

ஒழுக்க ரீதியாக, ஒரு தகவலை அணுக முடியும் என்பதற்காக மட்டுமே அதை வெளியிடுவது நியாயமானதாகாது. எனவே பத்திரிகையாளர்கள் தங்களிடம் கேட்க வேண்டிய கேள்வி: “இந்த தகவல் பொதுமக்களுக்கு உண்மையில் தேவையா? அல்லது இதை சேர்ப்பது ஒருவரின் நலனைக் காயப்படுத்தி பொதுமக்களின் ஆர்வத்தை மட்டும் பூர்த்தி செய்வதற்காகவா?”

- *மொழியிலும் காட்சிகளிலும் கண்ணியம் என்பது ஒரு விருப்பமல்ல, அது ஒரு தரநிலை*

மொழியும் படங்களும் தனிநபர்களை இழிவுபடுத்தலாம் அல்லது மனிதத்தன்மையற்றவர்களாகச் சித்தரிக்கலாம். அசுத்தம், அசாதாரணம் அல்லது ஒழுக்கக்கேடு ஆகியவற்றை உணர்த்தும் சொற்கள் மற்றும் உடல் அல்லது பாலின வெளிப்பாட்டை மிகைப்படுத்தும் காட்சிகள் "இரண்டாம் நிலை பாதிப்பை" (second victimisation) ஏற்படுத்தக்கூடும்; இதன் மூலம் ஊடகச் சித்தரிப்புகளால் மக்கள் மீண்டும் ஒருமுறை காயப்பட்டதாக உணர்கிறார்கள்[17] இக்காரணத்தினால், ஊடகவியலாளர்கள் நடுநிலையான, பொருத்தமான மற்றும் மரியாதையான மொழி மற்றும் காட்சிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்—இதன் மூலம் அறிக்கையிடலானது மக்களை ஒரு வேடிக்கைப் பொருளாக மாற்றாமலும் அல்லது களங்கத்தை வலுப்படுத்தாமலும் பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்க வேண்டும்.

தொடர்ந்து வரும் அத்தியாயங்கள், இலங்கையில் விசேட கவனம் தேவைப்படும் மூன்று அறிக்கையிடல் துறைகளுக்கு இந்த நெறிமுறைகளைப் பயன்படுத்துகின்றன. ஒவ்வொரு அத்தியாயமும் உறுதியான மொழித் தேர்வுகள், இலங்கை ஊடகங்களிலிருந்து உதாரணங்கள் மற்றும் அன்றாட செய்தி அறைச் சூழலில் அறிக்கையிடலை மேம்படுத்துவதற்கான நடைமுறை கருவிகளை வழங்குகின்றன.

16 16 National Centre for Victims of Crime, தனியுரிமை மற்றும் கண்ணியம்: ஊடகங்களுடன் தொடர்புகொள்வதற்கான ஒரு வழிகாட்டி < https://victimsofcrime.org/wp-content/uploads/2025/12/Privacy_and_Dignity_final.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

17 Ethics Eye, ‘பாலின அடிப்படையில் ஒரே மாதிரியாகச் சித்தரிக்கப்படும் தொழில்கள்?’ (Verité Media, Facebook, 16 மார்ச் 2023) < www.facebook.com/share/p/1G-7fjYCdBU/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

# அத்தியாயம் 1: பாலினப் பிரதிநிதித்துவம் குறித்த அறிக்கையிடல்

இந்த அத்தியாயம் அன்றாட செய்தி வெளியீட்டில் பாலினப் பிரதிநிதித்துவத்தை மையமாகக் கொண்டுள்ளது. குறிப்பாக, செய்திக் கதைகள் பெண்களை எவ்வாறு சித்தரிக்கின்றன, மேலும் அந்தச் சித்தரிப்புகள் நம்பகத்தன்மை, அதிகாரம், திறன் மற்றும் சமூக மதிப்பு பற்றிய பொதுமக்களின் எண்ணங்களை எவ்வாறு வடிவமைக்கின்றன என்பதைக் கவனத்தில் கொள்கிறது. செய்தி வெளியீடு குணநலன், திறன் அல்லது “மரியாதைக்குரிய தன்மை” என்பவற்றை மதிப்பிடுவதற்குப் பாலினத்தை ஒரு சுருக்கவழியாகப் பயன்படுத்தும் போது, அது சமூக மனப்பாங்குகளை வெறுமனே பிரதிபலிப்பதல்ல; அவற்றை அமைதியாக வலுப்படுத்தவும் செய்கிறது.

இலங்கையில், நீண்டகாலமாக நிலவிவரும் செய்தியக நடைமுறைகள், கடுமையான காலக்கெடுகள், மரபாக வந்த கதையிடும் பழக்கங்கள் — சில நேரங்களில் அறியாமையயான பாகுபாடுகளும் — ஊடகவியலாளர்கள் உணராமலேயே செய்தி வெளியீட்டில் பிரதிபலிக்கக்கூடும். செய்தி வெளியீடு பழக்கமான வடிவங்களுக்குள் சறுக்கிவிடக்கூடும்: பெண்கள் அவர்களின் நிபுணத்துவத்திற்குப் பதிலாக தோற்றம், குடும்பப் பாத்திரங்கள் அல்லது ஒழுக்கம் மூலம் விவரிக்கப்படலாம்; தொழில்முறை சாதனைகள் “அவர் ஒரு பெண் என்பதால் ஆச்சரியமானவை” என்ற வகையில் சித்தரிக்கப்படலாம்; நேர்காணல் கேள்விகள் அந்த நபரின் பணியை விட திருமணம், குழந்தைப் பராமரிப்பு அல்லது “அனுமதி” போன்ற விஷயங்களுக்குத் திசைமாறக்கூடும்; குற்றச் செய்திகளில் நாடகத் தன்மையை அதிகரிக்க பெண்கள் தனியாக முன்னிறுத்தப்படலாம்; மேலும் களங்கத்தை நிலைநிறுத்தும் வழக்குச் சொற்கள் அல்லது பெயரிடல்கள் பயன்படுத்தப்படக்கூடும்.[18] இந்தப் பழக்கங்கள் பெரும்பாலும் நோக்கமுடையவை அல்ல. ஆனால் அவை முக்கியமானவை. ஏனெனில் அவை பொதுமக்கள் பெண்களை எவ்வாறு பார்க்கிறார்கள் என்பதையே அல்லாமல், பெண்களும் சிறுமிகளும் தங்களைப் பற்றியும், பொதுவாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் தங்களுடைய இடத்தைப் பற்றியும் எவ்வாறு நினைக்கிறார்கள் என்பதையும் வடிவமைக்கின்றன.

இந்தச் சூழலில், பாதிப்பைக் குறைப்பது என்பது கடினமான கதைகளைத் தவிர்ப்பதையோ அல்லது விமர்சனத்தை மென்மைப்படுத்துவதையோ குறிக்கவில்லை. மாறாக, அது துல்லியமான செய்தி வெளியீட்டைப் பொறுப்புடனும் ஒழுக்கத்துடனும் மேற்கொள்வதைக் குறிக்கிறது: கேலிக்குப் பதிலாக கண்ணியத்தைத் தேர்வு செய்தல், கவனச்சிதறலுக்குப் பதிலாக தொடர்புடையதைத் தேர்வு செய்தல், மற்றும் இரட்டை தரநிலைகளுக்குப் பதிலாக நியாயத்தைத் தேர்வு செய்தல்.

இந்த அத்தியாயத்தில் வரும் எடுத்துக்காட்டுகள் பெரும்பாலும் பெண்கள் மற்றும் சிறுமிகளை மையமாகக் கொண்டவை; ஏனெனில் இத்தகைய நடைமுறைகளால் அவர்கள் அளவுக்கு அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். இருப்பினும், கண்ணியம், தொடர்புடைய தன்மை மற்றும் நியாயம் என்ற அதே கொள்கைகள் அனைத்து பாலினங்களையும் பற்றிய செய்தி வெளியீட்டிலும் பொருந்த வேண்டும்.

**முக்கிய கொள்கை: பெண்களைப் பற்றிய செய்தி வெளியீட்டில், எதிர்மறையான பாலின ஒரேமாதிரியான பிம்பங்களை வலுப்படுத்த வேண்டாம்; மேலும் அவர்களின் பாலினம் மற்றும் சமூகப் பாத்திரங்கள் மீது தேவையற்ற கவனத்தைச் செலுத்த வேண்டாம்.**

## 1.1 பெண்களின் தொழில்முறைத் தகுதி அல்லது தொழில்நுட்பத் திறனைக் குறைத்து மதிப்பிடும் இழிவுபடுத்தும் சொற்களைத் தவிர்க்கவும்.

இலங்கையில், பெண்கள் என்ன செய்ய முடியும் அல்லது என்ன செய்ய வேண்டும் என்பது குறித்த காலாவதியான அனுமானங்களின் ஊடாகவே அவர்கள் பெரும்பாலும் சித்தரிக்கப்படுகிறார்கள்.[19] இது பல்வேறு கருப்பொருள் சார்ந்த துறைகளிலும் காணப்படுகிறது. உதாரணமாக, அரசியல் அறிக்கையிடலில், பெண்கள் "மென்மையாகப் பேசுபவர்கள்" என்பதால் தகுதியற்றவர்கள் என விவரிக்கப்படலாம். விளையாட்டு அறிக்கையிடலில், பெண் விளையாட்டு வீரர்கள் வெறும் பங்கேற்பதற்காகவே ஒரு விசித்திரமானவர்களாகவோ அல்லது விதிவிலக்கானவர்களாகவோ

18 18 Prof Anuruddhi Edirisinghe மற்றும் ஏனையோர், இலங்கைச் செய்தித்தாள்களில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் இயற்கைக்கு மாறான மரணங்கள் குறித்த அறிக்கையிடல் (UNFPA Sri Lanka, ‘Population Matters’ கொள்கை வெளியீடு 07, பிப்ரவரி 2018) < https://srilanka.unfpa.org/sites/default/files/pub-pdf/6.%20PolicyBrief07_English_0.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

19 ‘பெண்களைப் பற்றிய ஒரே மாதிரியான சித்தரிப்புகளை (stereotypes) நிலைநிறுத்தும் மொழியைப் பயன்படுத்த வேண்டாம். இத்தகைய மொழி புண்படுத்தக்கூடியது, காலாவதியானது மற்றும் பெரும்பாலும் தவறானது’ Reuters, Reuters Handbook of Journalism (2015), 417 < https://www.mediareform.org.uk/wp-content/uploads/2015/12/Reuters_Handbook_of_Journalism.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது; ‘உலகையும் அதன் சாத்தியக்கூறுகளையும் பிரதிபலிக்காத மற்றும் சமூகத்தின் இரு பரிமாணச் சித்தரிப்பை நிலைநிறுத்தும் பாலின ரீதியான ஒரே மாதிரியான சித்தரிப்புகளைத் தவிர்க்கவும்’ UN Women, Guidelines for Gender and Conflict-sensitive Reporting (2019) ‘Five Key Principles of Gender-Sensitive Reporting’, 5 < https://eca.unwomen.org/sites/default/files/Field%20Office%20ECA/Attachments/Publications/2019/07/Guidelines%20for%20Media%20and%20Gender%20Ukraine/Guidelines_ENG_prew_40719_compressed.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

சித்தரிக்கப்படலாம்.[20] இத்தகைய சித்தரிப்புகள் பெண்களின் தொழில்முறை அடையாளத்தைப் பின்னிலைக்குத் தள்ளி, அவர்களின் பாலினத்திற்குத் தேவையற்ற முக்கியத்துவத்தை அளிக்கின்றன. இலங்கை ஊடகங்களுக்கான ஊடகப் பாலினப் சாசனத்திலும் (Media Gender Charter for Sri Lanka) இந்த அக்கறை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது; இதில் பெண்கள் அவர்களின் தொழில்முறை அடையாளத்தை விட இல்லறம் சார்ந்த சொற்களிலேயே பெரும்பாலும் விவரிக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.[21]

**நடைமுறைப்படுத்துவது எப்படி**

- அரசியல், அறிவியல், வணிகம், விளையாட்டு மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் பெண்களின் பங்கேற்பை சாதாரணமானதாகவும் முறையானதாகவும் கருதுங்கள்—அதை விசித்திரமானதாகவோ அல்லது ஆச்சரியமானதாகவோ காட்ட வேண்டாம்.

- தொழில்முறைச் சூழல்களில், பெண்களுக்கே உரித்தானவை எனக் கருதப்படும் குணாதிசயங்களை (stereotypically feminine qualities) தேவையற்ற முறையில் குறிப்பிடுவதைத் தவிர்க்கவும்—உதாரணமாக "சுமுது" (மென்மையான/மென்மையான நளினம் கொண்ட) அல்லது "சியுமெலி தத்" (மென்மையான கரங்கள்) போன்ற சொற்கள். இத்தகைய மொழிப் பிரயோகங்கள், பெண்கள் இயல்பாகவே அந்தத் துறைக்குச் சொந்தமானவர்கள் அல்ல என்ற கருத்தை மறைமுகமாக உணர்த்துவதுடன், குறிப்பிட்ட துறைகளில் தொழில்முறைத் திறன் என்பது ஆண்களுக்கே உரியது என்றும், பெண்கள் அங்கு ஒரு விதிவிலக்கு மட்டுமே என்ற பிம்பத்தையும் வலுப்படுத்துகின்றன.

**அறிக்கையிடல் உதாரணங்கள்**

| தவிர்க்கவும் | பயன்படுத்தவும் |
|---|---|
| "කතාවට කියන්නේ පිරිමින්ගේ හොර වැඩ අල්ලන්නට කාන්තාවන් තරම් දක්ෂයන් මිහිපිට නැති බවය. අපේ කල්පනාවේ හැටියට ඒ සහජ හැකියාවට දැන් ලොකුම වටිනාකම දී ඇත්තේ වැඩ බලන පොලිස්පති...... ඒ දැන් රටේම හොර වැඩ අල්ලන්න කාන්තාවකට භාර දී තිබීම නිසාය."<br><br>(மொழிபெயர்ப்பு: “ஒரு பழமொழி சொல்வதுபோல், பூமியில் ஆண்களின் தவறுகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதில் பெண்களை விட சிறந்தவர்கள் யாரும் இல்லை... எங்களுடைய பார்வையில், இந்த ‘இயற்கையான திறமைக்கு’ தற்போது மிக உயர்ந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில் முழு நாட்டின் தவறான செயல்களை வெளிக்கொணரும் பொறுப்பு இப்போது ஒரு பெண்ணிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது” என்று செயற்பாட்டு பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்”).[22] | “ජ්‍යෙෂ්ඨ පොලිස් නිලධාරී <නම> අපරාධ පරීක්ෂණ දෙපාර්තමේන්තුවේ අධ්‍යක්ෂ ධූරයට පත් කර ඇත. එම පත් කිරීම සිදු කර ඇත්තේ ඇයගේ සේවා වාර්තාව, විමර්ශන පළපුරුද්ද සහ ආයතනික රෙගුලාසි පදනම් කරගෙනය.”<br><br>(மொழிபெயர்ப்பு: "மூத்த காவல்துறை அதிகாரி <பெயர்> குற்றப் புலனாய்வுத் துறையின் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரது சேவைப் பதிவு, புலனாய்வு அனுபவம் மற்றும் நிறுவனத் தேவைகளின் அடிப்படையில் இந்த நியமனம் செய்யப்பட்டது.”) |

20 UN Women Türkiye, பாலினப் பொறுப்புணர்வுடன் கூடிய விளையாட்டுத் துறை அறிக்கையிடல் கையேடு (2025) < gender_responsive_sports_reporting_hand-book.pdf> 6 ஏப்ரல் 2026 அன்று பார்க்கப்பட்டது.

21 இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் தளம், இலங்கைக்கான ஊடக பாலின சாசனம் (2020) < https://ldjf.org/assets/downloads/publications/mgc-sri-lanka.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

22 Ethics Eye, ‘பாலின அடிப்படையில் ஒரே மாதிரியாகச் சித்தரிக்கப்படும் தொழில்கள்?’ (Verité Media, Facebook, 16 மார்ச் 2023) \< www.facebook.com/share/p/1G-7fjYCdBU/](https://www.google.com/search?q=https://www.facebook.com/share/p/1G7fjYCdBU/) \> 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

| தவிர்க்கவும் | பயன்படுத்தவும் |
| --- | --- |
| **"සුමුදු අතින් යකඩ නවන සුන්දරියෝ "**<br><br>(மொழிபெயர்ப்பு: மென்மையான கைகளால் எஃகு வளைத்துக்கொள்ளும் அழகிய பெண்கள்).[23] | **"ඇය ගොඩනැගිලි ද්‍රව්‍ය අලෙවිසැල / හාඩ්වෙයාර් වෙළඳසැල විශ්වාසයෙන් සහ කාර්යක්ෂමව මෙහෙයව න්නීය."**<br><br>(மொழிபெயர்ப்பு: "பாலினச் சித்தரிப்புகளைத் தகர்த்தெறிந்து, அவர் ஹார்ட்வேர் (hardware) விற்பனைப் பிரிவை நம்பிக்கையுடன் வழிநடத்துகிறார்.") |
| **"ගිනි තියන හමුදාවේ හිටියට ගිනි නිවන හමුදාව කතුන්ට අකැප ද?"**<br><br>(மொழிபெயர்ப்பு: அவர்கள் 'தீயை ஏற்றும் பிரிகேட்'வில் உள்ளனர், ஆனால் பெண்களுக்கு தீயணைப்பு பிரிகேட் ஏன் அனுமதி இல்லை?").[24]<br><br>குறிப்பு: பெண்கள் சில சமயங்களில் "**ගිනි තියනවා**" (தீ வைப்பு) என பாலின முன்மாதிரி பார்வையுடன் பார்க்கப்படுகின்றனர்; இது அவர்கள் அரசின் சூழலை தீவிரப்படுத்துகின்றனர் என்று, குறிப்பாக கிளர்ச்சி, கடிதசேர் செய்தி, அல்லது தேவையற்ற தகவலைப் பகிர்வது போன்ற செயல்களில் ஈடுபடுவதாக பொருள்படுத்தப்படுகிறது. | **"හැම තැනකම කරට කර සිටියත්, ගිනි නිවන හමුදාව තවමත් කාන්තාවන්ට අකැප ද?"**<br><br>(மொழிபெயர்ப்பு:"அனைத்துத் துறைகளிலும் அவர்கள் [ஆண்களுக்கு] நிகராக இருந்தபோதிலும், தீயணைப்புப் படை இன்னும் பெண்களுக்கு எட்டாக்கனியாகவே உள்ளதா?" |

23 Ethics Eye, 'பாலின அடிப்படையில் ஒரே மாதிரியாகச் சித்தரிக்கப்படும் தொழில்கள்?' (Verité Media, Facebook, 16 மார்ச் 2023) \< [www.facebook.com/share/p/1G-7fjYCdBU/](https://www.google.com/search?q=https://www.facebook.com/share/p/1G7fjYCdBU/) \> 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

24 Ethics Eye, 'இந்த அறிக்கையிடல் பொருத்தமானதா?' (Verité Media, Facebook, 23 பிப்ரவரி 2026) < [https://web.facebook.com/ethicseye/posts/pfbid0adzsdE6M-wz1h8tWMtR26c7BxxbU4GfMikzHYyd3W1U257sAjjDfDfUuRQNJ54twTl](https://web.facebook.com/ethicseye/posts/pfbid0adzsdE6Mwz1h8tWMtR26c7BxxbU4GfMikzHYy-d3W1U257sAjjDfDfUuRQNJ54twTl) > 27 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

## தவிர்க்கவும்

**"වළලු දැමූ සිනිඳු අත්වල වළලු වෙනුවට ටිකට් පොතක් අතට දුන්නේ ගිය සතියේය."**

(மொழிபெயர்ப்பு:"கடந்த வாரம் தான், வளையல்களுக்குப் பதிலாக, வளையல்களால் அலங்கரிக்கப்பட்ட அந்த மென்மையான கைகளில் டிக்கெட் புத்தகங்கள் வைக்கப்பட்டன")

குறிப்பு: கலாச்சார ரீதியாக, பெண்கள் தொழில்முறை திறமையை விட அழகு மற்றும் மென்மையால் சமப்படுத்தப்படுகிறார்கள். எனவே, "**වළලු දමූ අත**" ("வளையல்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு கை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) என்ற சொல் பெண்களின் ஈடுபாட்டைக் குறிக்க மொழியில் பயன்படுத்தப்படுகிறது.

## பயன்படுத்தவும்

**"ශ්‍රී ලාංකේය කාන්තාවන් මෙතෙක් කාලයක් නියැලී නොසිටි බස් කොන්දොස්තර වෘත්තියට නව පණක් එක් කරමින්, පසුගිය සතියේ සිට කාන්තාවන් බස් කොන්දොස්තරවරියන් ලෙස සේවය කිරීම ආරම්භ කළහ.."**

(மொழிபெயர்ப்பு:"பெண்களுக்கு நீண்டகாலமாகப் பழக்கமில்லாத ஒரு துறையாக இருந்த பேருந்து நடத்துனர் பணியில், கடந்த வாரம் பெண்கள் ஈடுபடத் தொடங்கியமை அந்தத் தொழிலுக்கு ஒரு புதிய உத்வேகத்தை அளித்துள்ளது").

**இது ஏன் முக்கியமானது:** பெண்களை அவர்களின் தொழில்முறைத் திறனுக்குப் பதிலாக எதிர்மறையான ஒரே மாதிரியான பிம்பங்கள் ஊடாகக் கட்டமைப்பது, அவர்களின் திறமைகள், தகுதிகள் மற்றும் சாதனைகளிலிருந்து கவனத்தைத் திசைதிருப்புகிறது. மேலும், பெண்கள் சில தொழில்கள் அல்லது தொழில்நுட்பத் துறைகளுக்கு இயல்பாகவே பொருந்தாதவர்கள் என்றும், அவர்களின் இருப்பு விளக்கப்பட வேண்டிய ஒன்றாகவோ, தகுதிப்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகவோ அல்லது ஒரு விதிவிலக்காகவோ கருதப்பட வேண்டும் என்ற கருத்தையும் இது வலுப்படுத்துகிறது.[25]

### 1.2 ஒத்த சூழ்நிலைகளில் ஆண்களிடமும் பெண்களிடமும் வெவ்வேறு கேள்விகளைக் கேட்பதன் மூலம் பாலின ஒரே மாதிரியான சித்தரிப்புகளை (stereotypes) வலுப்படுத்த வேண்டாம்

நேர்காணல்களின் போது, ஆண்களிடம் பெரும்பாலும் அவர்களின் தொழில்முறைப் பயணம், நிபுணத்துவம் மற்றும் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் அவர்களின் பங்களிப்பு குறித்தே கேள்விகள் கேட்கப்படுகின்றன. அதே சமயம், பெண்களிடம்—அவர்கள் பேசும் விடயத்திற்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லாதபோதும்—அவர்களின் திருமணம், குழந்தை வளர்ப்பு, வேலைக்குச் செல்லக் கிடைத்த "அனுமதி" அல்லது பல பொறுப்புகளை "சமன் செய்வது" (balancing) குறித்தே அதிகம் வினவப்படுகிறது. இது ஒருவரின் தொழில்முறை நம்பகத்தன்மையிலிருந்து (professional credibility) கவனத்தை அகற்றி, அவரது தனிப்பட்ட வாழ்வின் மீது திருப்புகிறது.

**இதை நடைமுறையில் எவ்வாறு செயல்படுத்துவது**

- *ஒரு மாற்றியமைத்தல் சோதனையைப் (reversibility test) பயன்படுத்துங்கள்: அதே போன்றதொரு செய்தியில், அதே தலையங்க நோக்கத்திற்காக, அதே பாத்திரத்தில் இருக்கும் ஒரு ஆணிடம் இதே கேள்வி கேட்கப்படுமா என்று உங்களையே கேளுங்கள்.[26] அவ்வாறு இல்லை எனில், அக்கேள்வி உண்மையான பொருத்தத்தை விட பாலினச் சார்பையே பிரதிபலிக்கக்கூடும்.*

25 UN Women Türkiye, பாலினப் பொறுப்புணர்வுடன் கூடிய விளையாட்டுத் துறை அறிக்கையிடல் கையேடு (2025) < gender_responsive_sports_reporting_handbook.pdf> 6 ஏப்ரல் 2026 அன்று பார்க்கப்பட்டது.

26 Ethics Eye, 'செய்தித்தாள் இணைப்பிதழ் நேர்காணல்களில் பாலின ஏற்றத்தாழ்வுகளை வலுப்படுத்துதல் மற்றும் அது தொடர்பான கவலைகள்' (Verité Media, Facebook, 8 பிப்ரவரி 2017) < www.facebook.com/share/1Dz62Zzh65/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது; Ethics Eye, 'பெண்களுக்கு மாத்திரம் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளா?' (Verité Media, Facebook, 8 மே 2024) < www.facebook.com/share/p/16x3naVis5/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

- *குடும்பப் பின்னணி என்பது செய்தியின் பொதுநல நோக்கத்திற்கு உண்மையிலேயே பொருத்தமானதாக இருந்தால் ஒழிய, சம்பந்தப்பட்ட நபரின் பணி, முடிவுகள் மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றின் மீது மட்டும் கவனத்தைச் செலுத்துங்கள்.*

**அறிக்கையிடல் உதாரணங்கள்**

| தவிர்க்கவும் | பயன்படுத்தவும் |
|---|---|
| **“ඔබ කායීබහුල වෙනකොට සැමියා කියන්නේ නැද්ද රඟපාන්න එපා කියලා?"**<br><br>(மொழிபெயர்ப்பு:“நீங்கள் பிஸியாக இருக்கும்போது, உங்கள் கணவர் ‘நீங்கள் நடிப்பதை நிறுத்துவீர்களா?’ என்று கேட்கமாட்டார்களா ").[27] | **“මේ වගේ කාර්යබහුල වෘත්තියක නියැලෙන්න ඔබේ පවුලෙන් ලැබෙන සහයෝගය ඔබට කොයිතරම් වැදගත්ද?"**<br><br>(மொழிபெயர்ப்பு: “இத்தகைய கடுமையான தொழில்முறை வாழ்க்கையை தொடர உங்களுடைய குடும்பத்தின் ஆதரவு எவ்வளவு முக்கியமாக இருந்தது?”) |
| **"කාන්තාවෝ පිරිසකට එකට එකතු වෙලා වැඩක් කරන්න බෑයි කියනවනේ, මේ... රංඩු කරගන් නැතුව?”**<br><br>(மொழிபெயர்ப்பு:("சண்டையிடாமல் ஒரு பெண் குழு ஒன்றாக வேலை செய்ய முடியாது என்று கூறப்படுகிறது.....").[28] | **"වෘත්තීයවේදීන් පිරිසක් ලෙස, ඔබ හැමෝම එකම අරමුණක් වෙනුවෙන් මේ තරම් කැපවීමෙන් වැඩ කරන්නේ කොහොමද?"**<br><br>(மொழிபெயர்ப்பு: "தொழில் வல்லுநர்களின் குழுவாக, கூட்டு இலக்குகளை நோக்கி நீங்கள் எவ்வாறு திறம்பட செயல்படுகிறீர்கள்?) |

**இது ஏன் முக்கியமானது:** நேர்காணல் கட்டமைக்கப்படும் விதம் ஒருவரின் நம்பகத்தன்மையை (credibility) வெளிப்படுத்துகிறது. நிலையான தரநிலைகளைப் பின்பற்றுவது, பெண்கள் முதலில் தொழில்முறை நிபுணர்களாக நடத்தப்படுவதை உறுதி செய்கிறது; மாறாக, அவர்களின் தகுதி அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை முறையைப் பொறுத்து அமையும் ஒரு விதிவிலக்கான ஒன்றாகக் கருதப்படுவதைத் தவிர்க்கிறது.

### 1.3 பெண்களைப் பகுத்தறிவற்றவர்களாகவோ, தாழ்ந்தவர்களாகவோ அல்லது திறமையற்றவர்களாகவோ சித்தரிக்கும் இழிவுபடுத்தும் வெளிப்பாடுகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.

அறிக்கையிடலில் "பெண்" அல்லது பெண்மை சார்ந்த பண்புகளை பலவீனம், முட்டாள்தனம், தவறான தீர்ப்பு அல்லது தாழ்வுநிலை ஆகியவற்றின் அடையாளமாகப் பயன்படுத்தும் மொழியைத் தவிர்க்க வேண்டும். இலங்கை ஊடகங்களிலும் அன்றாடப் பேச்சிலும், சில வெளிப்பாடுகள் பெண்களை இயற்கையாகவே குறைந்த புத்திசாலித்தனம் கொண்டவர்களாகவோ, குறைந்த திறன் கொண்டவர்களாகவோ அல்லது வீட்டு வேலைகளுக்கு மட்டுமே பொருத்தமானவர்களாகவோ சித்தரிக்கின்றன.

உதாரணமாக, "கணு வடக் கரலா" (ගෑණු වැඩක් කරලා - "ஒரு பெண்ணைப் போல" ஏதோ ஒன்றைச் செய்தல்) அல்லது பெண்களின் அறிவுத்திறன் குறைவானது என உணர்த்தும் "கணுன்கே மொலே ஹெந்தி மிட்டே" (ගෑණුන්ගේ මොළේ හැඳි මිටේ - பெண்களின் மூளை அகப்பைக் காம்பில் உள்ளது) போன்ற சொற்றொடர்கள் பெண்களின் திறன் மற்றும் சமூகப் பங்கு குறித்த தீங்கு விளைவிக்கும் பிம்பங்களை வலுப்படுத்துகின்றன. அதேபோல், **"சீத்த வட கரன்ன எப்பா"** (චීත්ත වැඩ කරන්න එපා - "சீத்த" வேலை செய்யாதே) எனும் மரபுத்தொடர் ஒரு பாரம்பரிய பெண் ஆடையை இழிவுபடுத்தும் சொல்லாகப் பயன்படுத்துகிறது. "சீத்த" என்பதை கோழைத்தனம், ஏமாற்று வேலை அல்லது அற்பத்தனத்துடன் ஒப்பிடுவதன் மூலம், இந்த வெளிப்பாடானது பெண்மையை ஒரு தாழ்ந்த பண்புகளின் தொகுப்பாகக் குறைத்து

27 Ethics Eye, ‘செய்தித்தாள் இணைப்பிதழ் நேர்காணல்களில் பாலின ஏற்றத்தாழ்வுகளை வலுப்படுத்துதல் மற்றும் அது தொடர்பான கவலைகள்’ (Verité Media, Facebook, 8 பிப்ரவரி 2017) < www.facebook.com/share/1Dz62Zzh65/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது; Ethics Eye, ‘பெண்களுக்கு மாத்திரம் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளா?’ (Verité Media, Facebook, 8 மே 2024) < www.facebook.com/share/p/16x3naVis5/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

28 Ethics Eye, மார்ச் 2025 இல் பேங்காக் நகருக்கு அனைத்துப் பெண்களையும் கொண்ட குழுவினருடன் பயணித்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தின் மேலாளருடனான நேர்காணலின் ஒரு பகுதி; (Verité Media, Facebook, மார்ச் 2025) < www.facebook.com/share/r/17KB9YjVYw/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

மதிப்பிடுகிறது. இத்தகைய வெளிப்பாடுகளை சாதாரணமாகப் பயன்படுத்தும்போது கூட, அவை பெண்கள் மீதான அவமதிப்பை இயல்பாக்குவதுடன், அவர்களின் நம்பகத்தன்மை மற்றும் திறனைப் பொதுமக்கள் எவ்வாறு பார்க்கிறார்கள் என்பதையும் தீர்மானிக்கின்றன.

**நடைமுறைப்படுத்துவது எப்படி**

- *தவறுகள், தவறான முடிவுகள் அல்லது திறமையின்மை ஆகியவற்றிற்கு பாலினத்தை ஒரு காரணமாகக் காட்டாமல் நடந்ததை மட்டும் விளக்குங்கள்.*
- *பெண்கள் "இயல்பாகவே" பகுத்தறிவற்றவர்கள், முட்டாள்கள், தாழ்ந்தவர்கள் அல்லது வீட்டு வேலைகளுக்கு மட்டுமே பொருத்தமானவர்கள் என்று பொருள்படும் மரபுத்தொடர்களை மீண்டும் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.*

**அறிக்கையிடல் உதாரணங்கள்**

## தவிர்க்கவும்

**"ඔහු එකත් එකටම සිතුවේ භාර්යාව මේ පොත් තොගය ගිනි රකුසාට භාර දෙන්නට ඇති කියාය. ඒ ඇයගේ නුවණ හැදිමිටේ ඇති බව දන්නා නිසාය"**

**(மொழிபெயர்ப்பு:"தன் மனைவியின் அறிவு கரண்டியின் கைப்பிடி அளவுக்கு மட்டுமே உள்ளது என்று எண்ணிய அவர், புத்தகக் குவியலை நிச்சயமாக அவளே தீயில் போட்டிருப்பாள் என்று உறுதியாக நினைத்தார்)".[29]**

குறிப்பு: "**නුවණ හැදිමිටේ**" (கரண்டியின் கைப்பிடியில் இருக்கும் அறிவு) என்ற சொற்றொடர் ஒரு பாரம்பரிய சிங்களப் பழமொழியாகும். இது ஒருவரின் புத்திசாலித்தன்மை அல்லது முன்னறிவு மிகவும் குறைவானது என்பதைச் சுட்டிக்காட்ட பயன்படுத்தப்படுகிறது.

இந்த சூழலில், இந்தப் பழமொழியை—ஒரு ஆதாரத்தை மேற்கோள் காட்டும் போதும் கூட—பயன்படுத்துவது பெண்களின் அறிவுத்திறனை இழிவாகக் காணும் பார்வையை உறுதிப்படுத்துகிறது. இங்கு, கணவர் தனது மனைவி புத்தகங்களை தீயில் எரித்திருப்பாள் என்று அவசரமாக முடிவு செய்ததாகக் காட்டும் போது, அந்த எண்ணத்தை நியாயப்படுத்தும் வகையில் இந்த சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது.

## பயன்படுத்தவும்

**"ඉවත දැමූ පොතක් තුළ රුපියල් 5,000ක නෝට්ටුවක් සැඟවූ පුද්ගලයෙකු, පසුව සිය බිරිඳ එම පොත් ගොන්නම පුළුස්සා දමන්නට ඇතැයි සැක කිරීමේ සිදුවීමක් මෙම වාර්තා වේ."**

(மொழிபெயர்ப்பு: ("ஒரு ஆண் பயன்படுத்தாமல் இருந்த ஒரு புத்தகத்தில் 5,000 ரூபாய் நோட்டைக் மறைத்தார்; பின்னர் அந்தப் புத்தகக் குவியலை அவரது மனைவி எரித்திருக்கலாம் என்று அவர் சந்தேகித்தார்.")

**இது ஏன் முக்கியமானது:** பாலினம் சார்ந்த கேலி கிண்டல்கள் எந்தவொரு பொருத்தமான தகவலையும் தருவதில்லை. அவை பக்கச்சார்பை அறிமுகப்படுத்துவதுடன், பெண்கள் இயற்கையாகவே ஆண்களை விட குறைந்த திறன் கொண்டவர்கள், குறைந்த பகுத்தறிவு உடையவர்கள் அல்லது குறைந்த நம்பகத்தன்மை கொண்டவர்கள் என்ற கருத்தை வலுப்படுத்துகின்றன.

29 Ethics Eye, '"பெண்களின் அறிவு கரண்டி காம்பளவுதான்" — இத்தகைய கருத்துக்களை ஊடகங்கள் ஊக்குவிப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதா?' (Verité Media, Facebook, 1 நவம்பர் 2024) < www.facebook.com/share/p/1EEyusBz4B/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

### 1.4 பெண்களைப் பாலியல் ரீதியாகச் சித்தரிப்பதையோ அல்லது அவர்களின் தோற்றத்திற்குத் தேவையற்ற முக்கியத்துவம் அளிப்பதையோ தவிர்க்கவும்.

செய்திக்குத் தொடர்பில்லாத போதும், பெண்கள் பெரும்பாலும் அவர்களின் தோற்றம், ஆடை அல்லது கவர்ச்சியான குறிப்புகள் மூலமாகவே விவரிக்கப்படுகிறார்கள்.[30] இது வாசகரின் கவனத்தை நடந்தவற்றிலிருந்து திசைதிருப்பி, ஒரு பெண் எப்படித் தோற்றமளிக்கிறார் என்பதன் பக்கம் திருப்புகிறது.

**நடைமுறைப்படுத்துவது எப்படி**

- *ஒரு பெண்ணின் தோற்றம், ஆடை அல்லது சிகை அலங்காரம் குறித்து, அது கதைக்கு அத்தியாவசியமானதாக இருந்தால் ஒழிய குறிப்பிட வேண்டாம்—மேலும் ஆண்களுக்கும் இதே போன்ற விவரங்கள் சேர்க்கப்படும் என்றால் மட்டுமே அதைப் பயன்படுத்தவும்.[31]*
- *குறிப்பாகக் குற்றம், இறப்பு அல்லது விபத்துகள் குறித்த செய்திகளில், தோற்றம் என்பது பெரும்பாலும் தொடர்பற்ற ஒன்றாக இருப்பதால், "ரூமத்", "சுரூபி", "சுந்தர" அல்லது "லஸ்ஸன" (கவர்ச்சியான, அழகான) போன்ற அடைமொழிகளைத் தவிர்க்கவும்.*
- *காட்சிகளைத் தேர்ந்தெடுக்கும்போது, பெண்களின் உடல் பாகங்களையோ அல்லது ஆடைகளையோ பாலியல் ரீதியாக மிகைப்படுத்தும் கேலிச்சித்திரங்கள், விளக்கப்படங்கள் அல்லது படங்களைப் பயன்படுத்த வேண்டாம்*

**அறிக்கையிடல் உதாரணங்கள்**

| தவிர்க்கவும் | பயன்படுத்தவும் |
|---|---|
| **ලොවම පුදුම කළ ලක් මව සුරකින රූමතිය. දකුණු ආසියාවේ පළමු ලෝඩ් මාස්ටර් නිලධාරිනිය ඇයයි.**<br><br>(மொழிபெயர்ப்பு: "உலகையே வியக்க வைத்த இலங்கையைப் பாதுகாக்கும் பேரழகி. அவரே தெற்காசியாவின் முதல் பெண் லோட்மாஸ்டர் (loadmaster))"[32] | **ශ්‍රී ලංකා ගුවන් හමුදාවේ ගුවන් කාන්තාවක් 'ලෝඩ් මාස්ටර්' නිල ලාංඡනයෙන් පිදුම් ලබා ඇති අතර, ඒ අනුව දකුණු ආසියාවේ ප්‍රථම ලෝඩ් මාස්ටර්වරිය ලෙස ඇය වාර්තාගත වේ.**<br><br>(மொழிபெயர்ப்பு: "இலங்கை விமானப்படையைச் சேர்ந்த பெண் விமானி ஒருவருக்கு 'லோட்மாஸ்டர்' பதக்கம் வழங்கப்பட்டுள்ளது, இதன் மூலம் தெற்காசியாவின் முதல் பெண் லோட்மாஸ்டர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்." |

30 Prof Anuruddhi Edirisinghe மற்றும் ஏனையோர், இலங்கைச் செய்தித்தாள்களில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் இயற்கைக்கு மாறான மரணங்கள் குறித்த அறிக்கையிடல் (UNFPA Sri Lanka, 'Population Matters' கொள்கை வெளியீடு 07, பிப்ரவரி 2018) < https://srilanka.unfpa.org/sites/default/files/pub-pdf/6.%20Policy-Brief07_English_0.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

31 Reuters, ஊடகவியல் கையேடு (2015) < www.mediareform.org.uk/wp-content/uploads/2015/12/Reuters_Handbook_of_Journalism.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

32 32 Verité Media, 'ஒரு லோட்மாஸ்டர் "அழகி"யா?' (Instagram, 9 ஏப்ரல் 2025), < www.instagram.com/p/DIOrsoqTQ_K/?igsh=MmRpN2M3a3MyMmEy > 02 ஏப்ரல் 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

| தவிர்க்கவும் | பயன்படுத்தவும் |
| --- | --- |
| சூழல்: ஒரு நபர் தனது துணையால் கொலை செய்யப்பட்டது குறித்த செய்தியில், உயிரிழந்தவரை விவரிக்க பின்வருபவை பயன்படுத்தப்பட்டன.<br><br>**උසට සරිලන මනා රූසපුවකට හිමිකම් කී [නම], 25 වියේ පසු වූ සුන්දර යුවතියකි.**<br><br>(அவரது உயரத்திற்கு ஏற்ற வியக்கத்தக்க அழகைக் கொண்டிருந்த [பெயர்], 25 வயதுடைய ஒரு அழகான பெண் ஆவார்..)[33] | **25 හැවිරිදි කාන්තාවක් ඇයගේ පෙම්වතා විසින් ඝාතනය කර ඇති බවට වාර්තා වේ.**<br><br>(மொழிபெயர்ப்பு: தனது காதலனால் 25 வயதுடைய பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது) |

**இது ஏன் முக்கியமானது:** தோற்றத்தை முன்னிலைப்படுத்தும் கட்டமைப்பு, பெண்களை அவர்களின் நம்பகத்தன்மை அல்லது திறனுக்குப் பதிலாக "அழகு" எனும் தரநிலையின் அடிப்படையில் மதிப்பிட பொதுமக்களைப் பழக்குகிறது. காலப்போக்கில், இது பொது வாழ்வில் பெண்கள் நடத்தப்படும் விதத்தையும்—மற்றும் சிறுமிகள் தங்களைப் பற்றி எது முக்கியமானது என்று கற்றுக்கொள்வதையும் பாதிக்கிறது.[34] உளவியல் மற்றும் மருத்துவ ஆய்வுகள், பெண்களைத் தொடர்ந்து பாலியல் ரீதியாகவும் ஒரே மாதிரியான பிம்பங்களாகவும் சித்தரிப்பதைக் காண்பது, உடல் தோற்றம் குறித்த எதிர்மறை எண்ணங்கள், உணவு உண்ணும் கோளாறுகள் மற்றும் பிற எதிர்மறையான மனநல பாதிப்புகளுடன் தொடர்புடையது என்று குறிப்பிடுகின்றன.[35]

## 1.5 பெண்களுக்கான அல்லது பெண்கள் அதிகம் ஈடுபடும் பணிகளுக்கான காலாவதியான அல்லது இழிவுபடுத்தும் தொழில்முறைச் சொற்களைத் தவிர்க்கவும்.

அறிக்கையிடலில் பயன்படுத்தப்படும் சில சிங்களச் சொற்கள், பெண்களை எதிர்மறையாகச் சித்தரிக்கும் அல்லது சில வகை வேலைகளை அவமானகரமானதாக, குறைந்த அந்தஸ்துள்ளதாக அல்லது தார்மீக ரீதியாகச் சந்தேகத்திற்குரியதாகக் கருதும் பழைய கலாச்சார மனப்பான்மைகளைக் கொண்டுள்ளன.[36] ஊடகவியலாளர்கள் இத்தகைய மொழியை மறுபரிசீலனை செய்ய வேண்டும், மேலும் முடிந்தவரை நடுநிலையான மற்றும் தொழில்முறைச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும். இது இலங்கையின் ஆங்கில மொழி அறிக்கையிடலில் ஏற்கனவே காணப்பட்ட மாற்றங்களைப் போன்றது, அங்கு இழிவுபடுத்தும் மாற்றுகளுக்குப் பதிலாக "வீட்டுப் பணியாளர்" (domestic worker) மற்றும் "பாலியல் தொழிலாளி" (sex worker) போன்ற சொற்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. சிங்கள அறிக்கையிடலிலும் தீர்ப்புகளை வழங்காமல், வேலையைத் துல்லியமாக விவரிக்கும் சொற்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் இத்தகைய மாற்றங்களைச் செய்ய முடியும்.

**நடைமுறைப்படுத்துவது எப்படி**

- *களங்கம் அல்லது தார்மீகத் தீர்ப்பு இல்லாமல் வேலையை விவரிக்கும் தொழில்முறைச் சொற்களைப் பயன்படுத்துங்கள்.*
- *பெண்கள் மீதான சமமற்ற அல்லது காலாவதியான சமூக மனப்பான்மைகளைப் பிரதிபலிக்கும் பழைய சிங்கள வெளிப்பாடுகளை மறுபரிசீலனை செய்யுங்கள்.*

33 Verité Media, 'கதைக்கு தனிநபரின் உடல் தோற்றம் அவசியமானதா?' (Instagram, 20 மார்ச் 2026), < www.instagram.com/p/DWG24bLDBRc/?utm_source=ig_web_button_share_sheet > 02 ஏப்ரல் 2026 அன்று பார்க்கப்பட்டது.

34 Fabrizio Santoniccolo மற்றும் ஏனையோர், 'பாலினம் மற்றும் ஊடகச் சித்தரிப்புகள்: பாலின ரீதியான ஒரே மாதிரியான சித்தரிப்புகள், ஒரு பொருளாகக் கருதுதல் மற்றும் பாலியல்மயமாக்கல் குறித்த இலக்கிய ஆய்வு' (2023) 20 International Journal of Environmental Research and Public Health 5770 < https://doi.org/10.3390/ijerph20105770 > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

35 Fabrizio Santoniccolo மற்றும் ஏனையோர், 'பாலினம் மற்றும் ஊடகச் சித்தரிப்புகள்: பாலின ரீதியான ஒரே மாதிரியான சித்தரிப்புகள், ஒரு பொருளாகக் கருதுதல் மற்றும் பாலியல்மயமாக்கல் குறித்த இலக்கிய ஆய்வு' (2023) 20 International Journal of Environmental Research and Public Health 5770 < https://doi.org/10.3390/ijerph20105770 > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

36 'சமூகம், மனித அனுபவங்கள், செயல்கள், கருத்துக்கள் மற்றும் கவலைகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஊடக அறிக்கையிடலில் பெண்கள் மற்றும் ஆண்களின் இருப்பைச் சமநிலைப்படுத்துங்கள்' UN Women, Guidelines for Gender and Conflict-sensitive Reporting (2019).

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

இந்த வழிகாட்டுதல் குறிப்பாகப் பொருத்தமான உள்ளூர் சூழலில் உள்ள இரண்டு பணித்துறைகள் பின்வருமாறு:

**a. வீட்டு வேலை**

சிங்கள அறிக்கையிடலில் பொதுவாக "மெஹெகாரிய" அல்லது "வேடகாரிய" (මෙහෙකාරිය/වැඩකාරිය - வேலைக்காரி) என்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தச் சொல் பழைய முதலாளி-தொழிலாளி உறவை நினைவுபடுத்துகிறது மற்றும் இன்றைய தொழில்முறை வேலைவாய்ப்பு யதார்த்தத்திற்குப் பொருந்தாததாகத் தோன்றுகிறது. இது வீட்டு வேலையை ஒரு கண்ணியமான உழைப்பாக அங்கீகரிப்பதற்குப் பதிலாக, பணியாளரைக் கீழ்ப்படிந்தவராகக் கட்டமைக்கிறது.

**அறிக்கையிடல் உதாரணங்கள்**

| தவிர்க்கவும் | பயன்படுத்தவும் |
| --- | --- |
| “දරුවා බලාගත් මෙහෙකාරිය නිරුවත් කර සමාජ මාධ්‍ය වල දමලා"<br><br>"( பராமரித்த வீட்டுப் பணியாளர் நிர்வாணப்படுத்தப்பட்டு சமூக ஊடகங்களில் பதிவிடப்பட்டார்)".[37] | “දරුවා බලාගැනීමට සිටි ගෘහ සේවිකාව/ගෘහ ශ්‍රමිකයා නිරුවත් කොට, වීඩියෝ කිරීමෙන් අනතුරුව සමාජ මාධ්‍ය වෙත මුදා හැරී බවට වාර්තා වේ.”<br><br>(மொழிபெயர்ப்பு: "குழந்தையைப் பராமரிக்கும் பொறுப்பில் இருந்த வீட்டுப் பணியாளர் நிர்வாணப்படுத்தப்பட்டு, காணொளி எடுக்கப்பட்டு, பின்னர் அக்காணொளி சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டது.”) |

**b. பாலியல் தொழில்**

சிங்கள அறிக்கையிடலில் அடிக்கடி "கணிகா" (ගණිකා) என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது, இது "விலைமகள்" என மொழிபெயர்க்கப்படுகிறது. இச்சொல் பெரும்பாலும் தார்மீகத் தீர்ப்பைக் கொண்டிருப்பதுடன், குறிப்பாகக் குற்றச் செய்திகளில் பரபரப்பை அதிகரிப்பதற்காகத் தவறாமல் பயன்படுத்தப்படுகிறது; அங்கு இந்த முத்திரை ஒரு அவதூறாகவோ அல்லது ஒருவரின் "நடத்தையை" விமர்சிப்பதாகவோ அமைகிறது. இத்தகைய கட்டமைப்பு உண்மைகளிலிருந்து கவனத்தைத் திசைதிருப்புவதுடன், சம்பந்தப்பட்ட நபர் மீதான சமூகக் களங்கத்தையும் தூண்டுகிறது.

இலங்கையில் உள்ள ஆங்கில மொழி அறிக்கையிடல், பொதுவாக "பாலியல் தொழிலாளி" (sex worker) என்பதை ஒரு நடுநிலையான விவரிப்புச் சொல்லாகப் பயன்படுத்துகிறது. தகவல் செய்திக்கு உண்மையிலேயே பொருத்தமானதாக இருக்கும் பட்சத்தில், சிங்கள அறிக்கையிடலும் "லிங்கிக ஸ்ராமிக" (ලිංගික ශ්‍රමික - பாலியல் தொழிலாளி) என்ற சொல்லைப் பயன்படுத்துவதன் மூலம் அதே அணுகுமுறையைப் பின்பற்றலாம்.

| தவிர்க்கவும் | பயன்படுத்தவும் |
| --- | --- |
| ගණිකා සේවයේ යෙදුණු සුරූපී කතුන් දැලේ<br><br>(மொழிபெயர்ப்பு:"பாலியல் தொழிலில் ஈடுபட்ட அழகான பெண்கள் கைது") [38] | ලිංගික ශ්‍රමිකයින් ලෙස සේවය කළ කාන්තාවන් අත්අඩංගුවට<br><br>(மொழிபெயர்ப்பு: "பாலியல் தொழிலில் ஈடுபட்ட பெண்கள் கைது".) |

37 Ethics Eye, 'மெஹறக்காரியா? [பணிப்பெண்?]' (Verité Media, Facebook, 21 ஜனவரி 2026) \< [www.facebook.com/share/p/1Adp3vDDGm/](https://www.google.com/search?q=https://www.facebook.com/share/p/1Adp3vDDGm/) \> 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

38 Ethics Eye, 'மெஹறக்காரியா? [பணிப்பெண்?]' (Verité Media, Facebook, 21 ஜனவரி 2026) \< [www.facebook.com/share/p/1Adp3vDDGm/](https://www.google.com/search?q=https://www.facebook.com/share/p/1Adp3vDDGm/) \> 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

**இது ஏன் முக்கியமானது:** குறிப்பாகப் பரபரப்புக்காகப் பயன்படுத்தப்படும் காலாவதியான மற்றும் இழிவுபடுத்தும் மொழி, வெறும் வேலையை மட்டும் விவரிப்பதில்லை; அது பெண்கள் மற்றும் அவர்கள் சார்ந்த உழைப்பு குறித்த சமூகத் தீர்ப்புகளையும் சுமந்து நிற்கிறது. தெளிவான, மரியாதையான சொற்களைப் பயன்படுத்துவது துல்லியமான அறிக்கையிடலுக்கு உதவுவதுடன், ஊடகவியலாளர்கள் தங்களை அறியாமலேயே தீங்கு விளைவிப்பதைத் தவிர்க்கவும் உதவுகிறது—அதே வேளையில், அவர்கள் செய்திகளில் குறிப்பிடும் நபர்களை வெறும் முத்திரைகளாகப் பார்க்காமல் தனிமனிதர்களாக மதிக்கவும் வழிவகுக்கிறது.

## சுருக்கம் — பாலின பிரதிநிதித்துவம் குறித்த அறிக்கையிடலுக்கான சரிபார்ப்புப் பட்டியல்

| | தவிர்க்க வேண்டியவை | செய்ய வேண்டியவை |
|---|---|---|
| 1.1 | பெண்களின் நிபுணத்துவத்தை "ஆச்சரியமானது", "அசாதாரணமானது" அல்லது அவர்களின் பாலினத்திற்கு இரண்டாம் நிலை என்பது போன்ற எதிர்மறையான பாலின வார்ப்புருக்கள். | தகுதி மற்றும் வகிக்கும் பொறுப்பிற்கு முதலிடம் அளிக்கவும். பொது வாழ்விலும் தொழில்முறைத் துறைகளிலும் பெண்களின் பங்களிப்பை சாதாரணமான மற்றும் நியாயமான ஒன்றாகக் கையாளவும்; அவர்களின் நம்பகத்தன்மையை பாலினத்தைக் கொண்டு விளக்காமல், அனுபவம், தகுதிகள் மற்றும் செயல்பாடுகளின் மூலம் விளக்கவும். |
| 1.2 | ஒரே மாதிரியான சூழ்நிலைகளில் இருக்கும் பெண்களுக்கு மட்டும் ஆண்களிடமிருந்து வேறுபட்ட கேள்விகளைக் கேட்டல். குறிப்பாக, ஒரு தொழில்முறைச் செய்தி குறித்து உரையாடும் போது திருமணம், குழந்தைப் பராமரிப்பு, "அனுமதி" அல்லது குடும்பத்தையும் வேலையையும் சமநிலைப்படுத்துவது குறித்த கேள்விகள். | "நேர்மாறான சோதனை" (reversibility test) முறையைப் பயன்படுத்துங்கள். அதே பாத்திரத்தில், அதே செய்தியில் ஒரு ஆண் இருந்தால் அவரிடம் இந்தக் கேள்வி கேட்கப்படுமா என்று சிந்தித்துப் பாருங்கள். குடும்பப் பின்னணி உண்மையாகவே செய்திக்குத் தேவைப்பட்டால் ஒழிய, வேலை, முடிவுகள் மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றில் கவனத்தைச் செலுத்துங்கள். |
| 1.3 | பகுத்தறிவின்மை, தாழ்வு நிலை, முட்டாள்தனம் அல்லது திறமையின்மையைக் குறிக்க "பெண்" அல்லது பெண்மைப் பண்புகளை ஒரு சுருக்கக் குறியீடாகப் பயன்படுத்தும் இழிவுபடுத்தும் வெளிப்பாடுகள். | தவறுகள், தவறான தீர்ப்புகள் அல்லது இயலாமைக்கு பாலினத்தைக் காரணமாகக் காட்டாமல், செயல்களையும் நிகழ்வுகளையும் மட்டும் விவரிக்கவும். பாலினவாத மரபுத்தொடர்களை (sexist idioms) தற்செயலாகக் கூடப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். |

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

| | தவிர்க்க வேண்டியவை | செய்ய வேண்டியவை |
|---|---|---|
| 1.4 | பெண்களைப் பாலியல் ரீதியாகச் சித்தரித்தல் அல்லது அவர்களின் தோற்றத்திற்குத் தேவையற்ற முக்கியத்துவம் அளித்தல். | மொழியையும் காட்சிகளையும் முற்றிலும் பொருத்தமானதாக உருவாக்குங்கள். செயல்கள், சான்றுகள் மற்றும் சூழலில் கவனம் செலுத்துங்கள்; தோற்றம் குறித்து மிகவும் அவசியமானால் மட்டுமே குறிப்பிடவும்—அதுவும் ஆண்களுக்கும் அவ்வாறே செய்யப்படும் பட்சத்தில் மட்டும். |
| 1.5 | பெண்களுக்கான மற்றும் பெண்கள் அதிகம் ஈடுபடும் பணிகளுக்கான காலாவதியான அல்லது இழிவுபடுத்தும் தொழில்முறைச் சொற்கள். குறிப்பாகத் தார்மீகத் தீர்ப்பு, "குறைந்த அந்தஸ்து" அல்லது கேலி செய்யும் வகையிலான முத்திரைகள். | பணிக்கு ஏற்ற துல்லியமான தொழில்முறைச் சொற்களைப் பயன்படுத்தவும். தார்மீகத் தீர்ப்பு இல்லாமல் வேலையை விவரிக்கவும் (உதாரணமாக, "வீட்டுப் பணியாளர்", "பாலியல் தொழிலாளி"). ஒருவரது தொழிலைச் செய்திக்கு நேரடியாகத் தொடர்புடையதாக இருந்தால் மட்டுமே குறிப்பிடவும். |

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

# அத்தியாயம் 2: பாலியல் நோக்குநிலை மற்றும் பாலின அடையாளம் குறித்த அறிக்கையிடல்

இலங்கை ஊடகங்கள் பாலியல் நோக்குநிலை மற்றும் பாலின அடையாளம் குறித்து எவ்வாறு அறிக்கையிடுகின்றன என்பதை இந்த அத்தியாயம் ஆராய்கிறது.[39] நடைமுறையில், செய்திகள் பெரும்பாலும் பரபரப்பு, ஊகம், ஒரே மாதிரியான சித்தரிப்புகள் (stereotypes) மற்றும் இழிவுபடுத்தும் மொழியையே சார்ந்துள்ளன. LGBTQIA+ தனிநபர்கள் தொடர்பான செய்திகள், பெரும்பாலும் அவர்களின் ஆடை அல்லது தோற்றத்தை முன்னிலைப்படுத்துகின்றன—அவ்விவரங்கள் அறிக்கையிடப்படும் நிகழ்வுக்குத் தொடர்பில்லாத போதும் இவ்வாறே செய்யப்படுகிறது. இத்தகைய அறிக்கையிடல் நபர்களைத் தரக்குறைவாகச் சித்தரிக்கலாம் அல்லது LGBTQIA+ அடையாளங்களைத் திரித்துக் காட்டலாம், மேலும் உண்மைகளை விட அவர்களின் அடையாளத்தையே செய்தியாகக் கருதும் நிலைக்கு வாசகர்களைத் தூண்டலாம்.

இலங்கையின் சூழலில், இதன் பாதிப்புகள் மிகவும் பாரதூரமானவை. LGBTQIA+ தனிநபர்கள் ஏற்கனவே சமூகக் களங்கம், குடும்பப் புறக்கணிப்பு மற்றும் சட்ட ரீதியான பாதிப்புகளை எதிர்கொள்ளக்கூடும். இத்தகைய பின்னணியில், தீங்கு விளைவிக்கும் நோக்கம் இல்லாவிட்டாலும் கூட, அறமற்ற முறையில் அறிக்கையிடுவது தனிநபர்களைத் துன்புறுத்தலுக்கு உள்ளாக்குவதோடு, வேலை இழப்பு, குடும்ப மோதல்கள் மற்றும் உடல் ரீதியான ஆபத்துகளுக்கும் அவர்களை ஆளாக்கக்கூடும்.

எனவே, இங்கு பாதிப்பைக் குறைப்பது என்பது செய்திகளைத் தவிர்க்க வேண்டும் என்பதல்ல; மாறாக தொழில்முறை ஒழுக்கத்தைப் பேணுவதாகும். இதன் பொருள் தனிநபர்களை ஒரே மாதிரியான சித்தரிப்புகளாகப் பார்க்காமல் மனிதர்களாக விவரிப்பது; அடையாளம் வெளிப்படுவதால் பாதிப்பு ஏற்படக்கூடும் எனில் அதைப் பாதுகாப்பது; கலைச்சொற்களை உறுதிப்படுத்துவதுடன் ஊகங்களைச் சாராமல் இருப்பது; வாசகர்கள் நிகழ்வைப் புரிந்துகொள்வதற்குத் தேவையான விவரங்களை மட்டும் உள்ளடக்குவது; மற்றும் அந்தத் தனிநபர்களைக் கேலி செய்யும், அம்பலப்படுத்தும் அல்லது பரபரப்பாக்கும் மொழி அல்லது காட்சிகளைத் தவிர்ப்பது ஆகும்.

நடைமுறையில், இது ஊடகவியலாளர்கள் சற்று நிதானித்து ஒரு கேள்வியைக் கேட்கக் கோருகிறது: இந்த விவரம் செய்தியை விளக்குவதற்கு அவசியமானதா—அல்லது இது வெறும் அடையாளத்தின் மீது கவனத்தை ஈர்க்கிறதா?

**முக்கியக் கொள்கை: LGBTQIA+ தனிநபர்களை மரியாதையுடன் சித்தரிப்பதோடு, தீங்கு விளைவிக்கும் ஒரே மாதிரியான (stereotypes) அல்லது தேவையற்ற வெளிப்படுத்தல்களைத் தவிர்க்கவும்.**

## 2.1 எதிர்மறையான சூழல்களில் மட்டும் LGBTQIA+ அடையாளத்தை முன்னிலைப்படுத்துவதன் மூலம் உருவாக்கப்படும் எதிர்மறை அடையாளச் சித்தரிப்பைத் தவிர்க்கவும்

இலங்கை ஊடகங்களில், LGBTQIA+ அடையாளம் பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையிலேயே முன்னிலைப்படுத்தப்படுகிறது—முக்கியமாக குற்றச் செயல்கள், விபத்துக்கள், மரணங்கள் அல்லது பிற எதிர்மறையான நிகழ்வுகள் குறித்த செய்திகளில் இது அதிகம் காணப்படுகிறது.[40] அதேவேளையில், தொழில்முறை சாதனைகள், சமூகப் பங்களிப்புகள் அல்லது அன்றாட வாழ்க்கை போன்ற நடுநிலையான அல்லது நேர்மறையான சூழல்களில் LGBTQIA+ அடையாளங்கள் அரிதாகவே குறிப்பிடப்படுகின்றன. இது பிரதிநிதித்துவத்தில் ஒரு சமநிலையற்ற தன்மையை உருவாக்குகிறது.[41]

இத்தகைய தேர்ந்தெடுக்கப்பட்ட வெளிப்படுத்தல், எதிர்மறையான அடையாளச் சித்தரிப்பிற்கு (negative identity profiling) வழிவகுக்கிறது. ஒரு அடையாளம் மீண்டும் மீண்டும் தவறு செய்தல், ஊழல் அல்லது தீங்கு விளைவித்தல் ஆகியவற்றுடன் மட்டுமே தொடர்புபடுத்தி முன்னிலைப்படுத்தப்படும்போது, LGBTQIA+ நபர்கள் இத்தகைய நிகழ்வுகளுடன் தொடர்புடையவர்களாக இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்ற பிம்பத்தை அது உருவாக்கக்கூடும்.

39 Associated Press, The Associated Press Stylebook (55வது பதிப்பு, 2020) ‘பாலினம் மற்றும் பாலியல்பு’

40 Ethics Eye, ‘இறந்தவரின் ஆடை செய்திக்கு அவசியமானதா?’ (Verité Media, Instagram, 9 பிப்ரவரி 2024), < www.instagram.com/p/C3IQs68BGZ3/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

41 Agence France-Presse, தலையங்கத் தரநிலைகள் மற்றும் சிறந்த நடைமுறைகள் (பிப்ரவரி 2025), 12 < www.afp.com/communication/afp_ethic_February_2025.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது; BBC-இன் தலையங்கத் தரநிலைகள் (BBC, ஜூன் 2019), 83 < https://downloads.bbc.co.uk/guidelines/editorialguidelines/pdfs/bbc-editorial-guidelines-whole-document.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது. Ethics Eye, ‘“டொம்பாய்ஸ்” (Tomboys) குறித்த ஒரே மாதிரியான சித்தரிப்பு அவசியமா?’ (Verité Media, Facebook, 9 பிப்ரவரி 2024) < www.facebook.com/share/p/17wjM1F4Ti/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

[42] காலப்போக்கில், இது ஒரே மாதிரியான வெளிப்படுத்தல்களை வலுப்படுத்துவதுடன், தொடர்பில்லாத சம்பவங்களை வாசகர்கள் எவ்வாறு புரிந்துகொள்கிறார்கள் என்பதையும் தீர்மானிக்கிறது.

இதனுடன் தொடர்புடைய மற்றொரு சிக்கல் என்னவென்றால், ஒருவரது தோற்றத்தை அவரது அடையாளத்திற்கான அடையாளமாகப் பயன்படுத்துவதாகும். ஒருவரது ஆடை, தலைமுடி அலங்காரம் அல்லது ஒப்பனை ஆகியவை அவரது பாலியல் நோக்குநிலை அல்லது பாலின அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாது. அத்தகைய விவரங்களை அடையாளத்தின் வெளிப்பாடாகச் சித்தரிப்பது, சிக்கலான அடையாளங்களை வெறும் காட்சி அடையாளங்களாகக் குறுக்குவதுடன், அவற்றை வாசகர்கள் எதிர்மறையாகப் புரிந்துகொள்ளவும் தூண்டுகிறது.[43]

**நடைமுறைப்படுத்துவது எப்படி**

- *ஒரு நபரின் LGBTQIA+ அடையாளம், நடந்த சம்பவத்திற்குக் காரணமானது என்றோ, அதற்குப் பங்களித்தது என்றோ அல்லது அதனை விளக்க உதவுகிறது என்றோ குறிப்பிடாமல், சம்பவத்தின் உண்மைகளை மட்டும் அறிக்கையிடவும்.*
- *தோற்றத்தின் மூலம் அடையாளத்தை "நிரூபிக்க" முயற்சிக்காதீர்கள். ஆடை, தலைமுடி அலங்காரம் அல்லது ஒப்பனை ஆகியவை ஒருவரது அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாது, எனவே அவற்றைச் சான்றுகளாக முன்வைக்கக் கூடாது.*
- *LGBTQIA+ அடையாளத்தைக் குறிப்பிடுவதற்கு முன்னதாக அது செய்திற்குப் பொருத்தமானதா (relevance test) என்று சோதித்துப் பார்க்கவும். ஒரு தகவல் பொருத்தமானதாக இருக்க வேண்டுமாயின், அது துல்லியமான மற்றும் நேர்மறையான கலாச்சாரப் புரிதலுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும்; மாறாக பாரபட்சம், அதிர்ச்சி அல்லது களங்கத்தை ஏற்படுத்துவதாக இருக்கக் கூடாது.*
- *அடையாளம் உண்மையாகவே செய்திற்குத் தொடர்புடையதாக இருக்கும் பட்சத்தில் (உதாரணமாக: பாகுபாடு, கொள்கை அல்லது உரிமைகள் குறித்த செய்திகள்), அதனைத் துல்லியமாகவும் சூழலுக்கு ஏற்றவாறும் அறிக்கையிடவும்.*

**அறிக்கையிடலுக்கான உதாரணங்கள்**

| தவிர்க்கவும் | பயன்படுத்தவும் |
|---|---|
| **"තායිලන්ත ලිංගික සංක්‍රාන්තිකයා ළඟ එක් කෝටි 20 ලක්ෂයක "කුෂ්".**<br><br>(மொழிபெயர்ப்பு: "தாய்லாந்து திருநங்கையிடம் 120 மில்லியன் மதிப்புள்ள 'குஷ்' கஞ்சா சிக்கியது").[44] | **"රුපියල් කෝටියක් වටිනා කුෂ් මෙරටට ගෙනා තායිලන්ත ජාතික සැකකරුවෙක් "**<br><br>(மொழிபெயர்ப்பு "10 மில்லியன் ரூபாய் மதிப்பிலான குஷ் கஞ்சாவை நாட்டிற்குள் கடத்திய சந்தேகத்தின் பேரில் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.") |

42 Yvonne Jewkes, ஊடகம் மற்றும் குற்றம் (3வது பதிப்பு, SAGE Publications Ltd 2015); Larry Gross, கண்ணுக்குத் தெரியாத நிலையிலிருந்து மேலே: அமெரிக்காவில் லெஸ்பியன்கள், ஓரினச்சேர்க்கையாளர்கள் மற்றும் ஊடகங்கள் (Columbia University Press 2001).

43 Yvonne Jewkes, ஊடகம் மற்றும் குற்றம் (3வது பதிப்பு, SAGE Publications Ltd 2015); Larry Gross, கண்ணுக்குத் தெரியாத நிலையிலிருந்து மேலே: அமெரிக்காவில் லெஸ்பியன்கள், ஓரினச்சேர்க்கையாளர்கள் மற்றும் ஊடகங்கள் (Columbia University Press 2001).

44 Ethics Eye, 'இந்தத் தலைப்புகளை ஒப்பிட்டுப் பார்ப்போம். நீங்கள் எந்த அறிக்கையிடல் பாணியைத் தேர்ந்தெடுப்பீர்கள்?' (Verité Media, Facebook, 23 மே 2025) < www.facebook.com/share/p/17SbYnNNRp/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

| தவிர்க்கவும் | பயன்படுத்தவும் |
|---|---|
| சூழல்: தான் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகம் செய்ய முயன்ற நபரால் தாக்கப்பட்டதில், ஒருவர் உயிரிழந்தது குறித்த விரிவான அறிக்கை.<br><br>**සංක්‍රාන්ති ලිංගික තරුණියගෙන් පහර කෑ 62 හැවිරිදි අයෙක් මරුට.**<br><br>(மொழிபெயர்ப்பு: "திருநங்கை ஒருவரால் தாக்கப்பட்டதில் 62 வயது நபர் உயிரிழப்பு.")[45] | **තරුණියකට සිදු කිරීමට තැත් කළ ලිංගික අතවරයක් අතරතුර ඇති වූ පහරදීමක් හේතුවෙන් 62 හැවිරිදි පුද්ගලයෙකු ජීවිතක්ෂයට පත්ව තිබේ.**<br><br>(மொழிபெயர்ப்பு: பெண் ஒருவரைப் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகம் செய்ய முயன்றபோது ஏற்பட்ட மோதலில் 62 வயது நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.) |
| சூழல்: ஹிக்கடுவாவில் உள்ள ஒரு ஹோட்டலில், ஹோட்டல் ஊழியர்கள் ஒரு சடலத்தைக் கண்டுபிடித்தது தொடர்பான செய்தி அறிக்கையின் தலைப்பிலிருந்து பின்வரும் எடுத்துக்காட்டு எடுக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர் LGBTQIA+ சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதைக் குறிப்பதாக உணர்த்தும் விதத்தில், பெண்களுக்கான உள்ளாடைகள் பரபரப்பாகச் சொல்லப்பட்டிருந்தது. அவை தொடர்புடைய விவரங்களாக இருந்தால், அவை சம்பவ இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களாக அறிக்கையின் பின்னர் எளிமையாகக் குறிப்பிடப்பட வேண்டும்.<br><br>**කාන්තා යට ඇඳුමින් අභිරහස් ලෙස මියගිය තරුණයෙකුගේ මළ සිරුර හික්කඩුවේ හෝටලයක.**<br><br>(மொழிபெயர்ப்பு: "பெண்களுக்கான உள்ளாடைகளை அணிந்திருந்த நிலையில், சந்தேகத்துக்கிடமான சூழலில் உயிரிழந்த இளைஞரின் சடலம் ஹிக்கடுவாவில் உள்ள ஒரு ஹோட்டலில் கண்டுபிடிக்கப்பட்டது".)[46] | **සැකකටයුතු ලෙස මියගිය අයෙකුගේ මළ සිරුරක් හික්කඩුවේ හෝටලයක තිබී සොයාගෙන ඇත.**<br><br>(மொழிபெயர்ப்பு: "சந்தேகத்துக்கிடமான சூழலில் உயிரிழந்த ஒருவரின் சடலம் ஹிக்கடுவாவில் உள்ள ஒரு ஹோட்டலில் கண்டுபிடிக்கப்பட்டது") |

**இது ஏன் முக்கியமானது:** தீய எண்ணம் இல்லாவிட்டாலும் கூட, எதிர்மறையான அடையாளச் சித்தரிப்பு (negative identity profiling) உண்மையான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும். LGBTQIA+ அடையாளம் மீண்டும் மீண்டும் குற்றங்கள், மரணங்கள் அல்லது ஊழல்கள் போன்ற எதிர்மறையான சூழல்களில் மட்டும் முன்னிலைப்படுத்தப்பட்டு — சாதனைகள், சமூகம் அல்லது அன்றாட வாழ்க்கை குறித்த விடயங்கள் செய்திகளில் தவிர்க்கப்படும்போது — ஊடகங்கள் ஒரு களங்கப்படுத்தும் போக்கை உருவாக்குகின்றன.[47] காலப்போக்கில், இத்தகைய தொடர்ச்சியான எதிர்மறைத் தொடர்புகள், ஒரு குறிப்பிட்ட கருத்தினால் அல்லாமல், அந்தப் பிரிவினரையே சமூகத்திற்குப் புறம்பானவர்களாகத் தோன்றச் செய்துவிடுகின்றன.

45 Ethics Eye, 'ஒரு பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் ஒரு மரணம்? ஆனால் கவனம் பாலியல்பு (sexuality) மீதா?' (Facebook, 18 டிசம்பர் 2024) < www.facebook.com/share/p/1CgeKkPgHa/ > 02 ஏப்ரல் 2026 அன்று பார்க்கப்பட்டது.

46 Ethics Eye, 'இந்த அறிக்கையிடல் குறித்த உங்கள் கருத்துக்கள் என்ன?' (Facebook, 02 பிப்ரவரி 2024) < www.facebook.com/share/1c68gFEsUg/ > 02 ஏப்ரல் 2026 அன்று பார்க்கப்பட்டது.

47 Bruce G Link மற்றும் Jo C Phelan, 'இழிவை வரையறுத்தல்' (Conceptualizing Stigma) (2001) 27 Annual Review of Sociology 363 < Conceptualizing Stigma | Annual Reviews > 6 ஏப்ரல் 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

## 2.2 அவதூறுகள், கேலி செய்தல் மற்றும் "அசாதாரணத்தன்மை" குறித்த மொழியைத் தவிர்க்கவும்.

ஒரு செய்தியில் LGBTQIA+ அடையாளத்தைக் குறிப்பிடுவது அவசியமானது என ஒரு ஊடகவியலாளர் தீர்மானித்த பிறகு, அடுத்ததாக எழும் கேள்வி அதனை எவ்வாறு விவரிப்பது என்பதாகும்.[48] இங்குதான் இலங்கை ஊடக அறிக்கையிடல் பெரும்பாலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது — இது திட்டமிட்ட நோக்கத்தினால் அல்லாமல், காலம் காலமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் சொற்களஞ்சியத்தின் மூலம் நிகழ்கிறது.

சிங்களச் சொல்லான 'சமனலயா' (සමනළයා - வண்ணத்துப்பூச்சி), அல்லது 'அசாமானிய' (අසාමාන්‍ය - இயல்புக்கு மாறானது) மற்றும் 'அஸ்வபாவிக' (අස්වභාවික - இயற்கைக்கு மாறானது) போன்ற சொற்பிரயோகங்கள் நடுநிலையான விளக்கங்கள் அல்ல.[49] அவை LGBTQIA+ அடையாளங்கள் குறைபாடுள்ளவை, வேடிக்கையானவை அல்லது தார்மீக ரீதியாகச் சந்தேகத்திற்குரியவை என்ற மறைமுகக் கருத்துக்களைக் கொண்டுள்ளன. ஊடகவியலாளர்கள் இத்தகைய மொழியைத் தற்செயலாகவோ அல்லது மற்றவர்களின் கூற்றுகளை மேற்கோள் காட்டும் போதோ பயன்படுத்தும்போது, அந்தத் தவறான தீர்ப்புகளை உண்மை போல மீண்டும் உருவாக்குகிறார்கள்.

இது அறிவியல் பூர்வமான ஒருமித்த கருத்துக்களுக்கு முற்றிலும் முரணானது.[50] 1990 ஆம் ஆண்டில் உலக சுகாதார நிறுவனம் (WHO) ஓரினச்சேர்க்கையை ஒரு மனநலக் குறைபாடு என்ற பட்டியலிலிருந்து நீக்கியது.[51] அமெரிக்க மனநலச் சங்கமும் (APA) 1973 ஆம் ஆண்டிலேயே இதே முடிவுக்கு வந்தது.[52] எனவே, LGBTQIA+ அடையாளங்களை நோய் சார்ந்ததாகவோ அல்லது பிறழ்ந்த ஒன்றாகவோ விவரிப்பது என்பது வெறும் ஊடக விருப்பம் சார்ந்த விடயமல்ல — அது ஒரு உண்மைப்பிழையாகும் (factual error).[53]

**நடைமுறைப்படுத்துவது எப்படி**

- *கண்ணியமான சொற்களைப் பயன்படுத்தவும்: கேலி செய்யும் அல்லது இழிவுபடுத்தும் சொற்களுக்குப் பதிலாக, அந்தந்த சமூகத்தினர் தங்களை அடையாளப்படுத்தப் பயன்படுத்தும் சரியான கலைச்சொற்களைப் (உதாரணமாக: திருநங்கை, ஓரினச்சேர்க்கையாளர்) பயன்படுத்தவும்.*

- *மருத்துவ ரீதியாகத் தவறான சொற்களைத் தவிர்க்கவும்: "இயல்புக்கு மாறானது", "இயற்கைக்கு முரணானது" அல்லது "மனநோய்" போன்ற சொற்களைப் பயன்படுத்த வேண்டாம். இவை அறிவியல் பூர்வமாக நிராகரிக்கப்பட்டவை.*

- *மேற்கோள்களைக் கையாளும்போது கவனமாக இருக்கவும்: மற்றவர்கள் இழிவுச்சொற்களைப் பயன்படுத்தும் போது, அவற்றை அப்படியே வெளியிடுவதைத் தவிர்க்கவும். செய்தியின் சாராம்சம் மாறாமல் அவற்றை நடுநிலையான மொழியில் மாற்றி அமைக்கவும்.*

- *கேலி செய்யும் தொனியைத் தவிர்க்கவும்: ஒருவரது அடையாளத்தை வேடிக்கையான ஒன்றாகவோ அல்லது நகைச்சுவைக்குரிய பொருளாகவோ சித்தரிப்பதைத் தவிர்க்கவும்.*

48 ''பாலியல், இன, மத அல்லது ஏனைய ஒரே மாதிரியான சித்தரிப்புகளை (Stereotypes) நிலைநிறுத்தும் மொழியைப் பயன்படுத்த வேண்டாம். இத்தகைய மொழியானது புண்படுத்தக்கூடியது, காலாவதியானது மற்றும் பெரும்பாலும் துல்லியமற்றது' Reuters, ஊடகவியல் கையேடு (2015); BBC-இன் தலையங்கத் தரநிலைகள் (BBC, ஜூன் 2019), 83 < https://downloads.bbc.co.uk/guidelines/editorialguidelines/pdfs/bbc-editorial-guidelines-whole-document.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

49 Verité Media, 'அசாதாரணத்தன்மை' (Abnormality) (Instagram, 14 அக்டோபர் 2025), < https://www.instagram.com/p/DPyK-q7kYDx/?igsh=MThyZWM2MXY4andlNQ== > 02 ஏப்ரல் 2026 அன்று பார்க்கப்பட்டது.

50 Jack Drescher, 'DSM இலிருந்து வெளியேற்றம்: ஓரினச்சேர்க்கையை நோயியல் தன்மையற்றதாக்குதல்' (2015) Behavioural Sciences 5(4) 565–575 < www.mdpi.com/2076-328X/5/4/565 > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது; Rebeca Robles மற்றும் ஏனையோர், 'மனநலக் கோளாறுகளின் வகைப்பாட்டிலிருந்து திருநங்கை அடையாளத்தை நீக்குதல்: ICD-11 க்கான மெக்சிகன் கள ஆய்வு' (2016) 3(9) The Lancet Psychiatry 850–859 < www.thelancet.com/journals/lanpsy/article/PIIS2215-0366(16)30165-1/abstract > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

51 உலக சுகாதார அமைப்பின் ஐரோப்பிய பிராந்திய அலுவலகம், 'திருநங்கைகளுக்கான சிறந்த ஆரோக்கியம் மற்றும் உரிமைகளை நோக்கி ஒரு படி நெருக்கமாக நகர்தல்' (செய்தி வெளியீடு, 17 மே 2019) < www.who.int/europe/news/item/17-05-2019-moving-one-step-closer-to-better-health-and-rights-for-transgender-people > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

52 Barry Mann, 'அமெரிக்க மனநல மருத்துவ சங்கம் ஓரினச்சேர்க்கையை ஒரு மனநலக் கோளாறு பட்டியலிலிருந்து நீக்கியது' (EBSCO Research Starters, 2023) < www.ebsco.com/research-starters/psychology/american-psychiatric-association-delists-homosexuality-psychiatric > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

53 Jack Drescher, 'DSM இலிருந்து வெளியேற்றம்: ஓரினச்சேர்க்கையை நோயியல் தன்மையற்றதாக்குதல்' (2015) Behavioural Sciences 5(4) 565–575 < www.mdpi.com/2076-328X/5/4/565 > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

## தவிர்க்க வேண்டிய சொற்கள்

**නපුංසක** (நபும்சக (napunsaka): சில சூழல்களில் இது 'நபும்சகர்' அல்லது 'அலி' எனக் குறிக்கப்படுகிறது.)[55]

**සමනළයා** (சமனலயா (வண்ணத்துப்பூச்சி என்று பொருள்படும்) போன்ற சொற்கள், ஒரே பாலின உறவில் உள்ள ஆண்களைக் கேலி செய்ய அல்லது பெண்மைப்படுத்திக் காட்டப் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன.[56]

பாலின/பாலியல் அடையாளத்தை ஒரு கேலிப்பொருளாகவோ, மாறுவேடமாகவோ அல்லது ஏமாற்று வேலையாகவோ கருதும் சொற்கள் மற்றும் கட்டமைப்புகளைத் தவிர்க்கவும் (உதாரணத்திற்கு: LGBTQIA+ தனிநபர்களையும் ஒரே பாலின உறவுகளையும் விவரிக்க 'அசாமானிய" (இயல்புக்கு மாறானது) அல்லது "அஸ்வபாவிக" (இயற்கைக்கு மாறானது) போன்ற சொற்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்).[57]

"**විකෘති**" (விகிருதி - இயற்கைக்கு மாறான நடத்தையை விவரிக்கும் பொருளில் பயன்படுத்தப்படும் வக்கிரமான அல்லது சீரழிந்த என்ற அர்த்தம் தரும் சொல்).)[58]

## பயன்படுத்த வேண்டிய சொற்கள்[54]

**සංක්‍රාන්ති සමාජභාවී පුද්ගලයා** (Sankranthika Samajabhavi Pudgalaya – திருநங்கை/திருநம்பி/மாற்றுப் பாலினத்தவர்)

**සංක්‍රාන්ති කාන්තාව** (Sankranthika Kanthawa – திருநங்கை)

**සංක්‍රාන්ති පුරුෂයා** (Sankranthika Purushaya – திருநம்பி)

**සමරිසි පුද්ගලයා / සමරිසි තැනැත්තා** (Samarisi Pudgalaya / Thanaththa – ஒரே பாலின உறவில் உள்ளவர்)

**LGBTQIA+ පුද්ගලයා** (நபர்) அல்லது பாலியல் நோக்குநிலை தேவையற்ற இடங்களில் வெறுமனே **පුද්ගලයා** (நபர்).

**இது ஏன் முக்கியமானது:** ஊடகங்கள் பயன்படுத்தும் மொழி, நிஜ மனிதர்களைப் பொதுமக்கள் நடத்தும் விதம் குறித்த ஒரு போக்கை உருவாக்குகிறது. நடுநிலையான, துல்லியமான கலைச்சொற்கள் தேவையற்ற களங்கத்தைக் குறைக்கின்றன; அத்துடன் பாதிப்புகளைக் குறைத்தல் எனும் இந்த வழிகாட்டியின் கொள்கையையும் ஆதரிக்கின்றன—குறிப்பாக இலங்கையில், பொதுவெளியில் அடையாளம் காட்டப்படுவது LGBTQIA+ தனிநபர்களுக்குத் துன்புறுத்தல், வேலை இழப்பு, குடும்ப நிராகரிப்பு மற்றும் உடல் ரீதியான ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடும். மேலும், திருநங்கைகள்/திருநம்பிகள் குறித்த எதிர்மறையான அல்லது ஒரே மாதிரியான ஊடகச் செய்திகளைப் பார்ப்பது, திருநங்கைகளிடையே மோசமான மனநல பாதிப்புகளை (அதிகரித்த பதட்டம் மற்றும் மனச்சோர்வு உட்பட) ஏற்படுத்துவதோடு தொடர்புடையது என்று ஆராய்ச்சிகள் சுட்டிக்காட்டுகின்றன.[59]

54 Ethics Eye, 'திருநங்கையர் மீதான வெறுப்புணர்வுக்கு (transphobia) வழிவகுக்கக்கூடிய அறிக்கையிடலா?' (Verité Media, Facebook, 30 மே 2024) < www.facebook.com/share/p/1ASdrKZTNM/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

55 Ethics Eye, 'திருநங்கையர் மீதான வெறுப்புணர்வுக்கு (transphobia) வழிவகுக்கக்கூடிய அறிக்கையிடலா?' (Verité Media, Facebook, 30 மே 2024) < www.facebook.com/share/p/1ASdrKZTNM/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

56 Ethics Eye. ஓரினச்சேர்க்கை உறவுகளில் ஈடுபடுபவர்கள் ஏன் "பட்டாம்பூச்சிகள்" (Butterflies) என அழைக்கப்படுகிறார்கள்? 27 செப்டம்பர் 2023, https://www.instagram.com/p/CxshqskB6ZL/.

57 Ethics Eye, 'ஓரினச்சேர்க்கை உறவுகளில் ஈடுபடுபவர்கள் ஏன் "பட்டாம்பூச்சிகள்" (Butterflies) என அழைக்கப்படுகிறார்கள்?' (Verité Media, Instagram, 27 செப்டம்பர் 2023) < www.instagram.com/p/CxshqskB6ZL/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

58 Ethics Eye, 'ஓரினச்சேர்க்கை என்பது இயற்கைக்கு மாறான நடத்தையா?' (Verité Media, Facebook, 13 அக்டோபர் 2025) < www.facebook.com/share/p/1DPbkf7b-PR/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

59 Jaclyn M W Hughto மற்றும் ஏனையோர், 'திருநங்கைகள் தொடர்பான எதிர்மறையான ஊடகச் செய்திகள், திருநங்கைகளிடையே மோசமான மனநல விளைவுகளுடன் தொடர்புடையவை: பல மாநிலங்களை உள்ளடக்கிய ஒரு ஆய்வு' (2021) 8 LGBT Health 32 < https://doi.org/10.1089/lgbt.2020.0279 > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

## 2.3 LGBTQIA+ நபர்களைச் சித்தரிக்கும்போது மரியாதைக்குரிய காட்சிப்படிமங்களைத் (visuals) தேர்ந்தெடுத்தல்

காட்சிப்படுத்தல் என்பது LGBTQIA+ நபர்கள் தவறாகச் சித்தரிக்கப்படும் மிகவும் பொதுவான வழிகளில் ஒன்றாகும். ஊடகங்கள் அடிக்கடி கேலிச்சித்திரங்கள், தூண்டக்கூடிய சிறுபடங்கள் (குறிப்பாக இணையத்தில்), அல்லது தனிப்பட்ட சமூக ஊடகக் கணக்குகளிலிருந்து அனுமதி இன்றி எடுக்கப்பட்ட படங்களைப் பயன்படுத்துகின்றன. இத்தகைய தேர்வுகள் அடையாளத்தை மிகைப்படுத்துவதோடு (sensationalise), தனிநபர்களைப் பொதுவெளியில் அவர்களின் அனுமதி இன்றி வெளிப்படுத்துவதன் (outing) மூலம் அவர்களை ஆபத்திற்குள்ளாக்குகின்றன.

**நடைமுறைப்படுத்துவது எப்படி:**

- *அனுமதியின்றி அடையாளத்தை வெளிப்படுத்தும் படங்களை ஒருபோதும் பயன்படுத்த வேண்டாம். தனிப்பட்ட சமூக ஊடகங்களிலிருந்து எடுக்கப்பட்ட ஸ்கிரீன்ஷாட்களும் இதில் அடங்கும்.*
- *பாலின வெளிப்பாட்டைக் கேலி செய்யும் கேலிச்சித்திரங்கள் அல்லது கார்ட்டூன்களைத் தவிர்க்கவும். இத்தகைய மிகைப்படுத்தல்கள் ஒரே மாதிரியான எதிர்மறைக் கருத்துக்களையும் எள்ளலையும் உறுதிப்படுத்துகின்றன.*
- *நடுநிலையான, சூழலுக்குப் பொருத்தமான காட்சிப்படிமங்களைப் பயன்படுத்தவும். உதாரணமாக: நிழல் உருவங்கள் (silhouettes), குறியீட்டுப் படங்கள் (உதாரணமாக: வானவில் கொடி), அல்லது பொதுவான இடங்களின் புகைப்படங்கள்.*

**இது ஏன் முக்கியமானது:** ஒரு கட்டுரையை வாசிப்பதற்கு முன்பே காட்சிப்படிமங்கள் வாசகர்களைச் சென்றடைகின்றன. மரியாதைக்குரிய படங்கள் ஒருவரை அவரது விருப்பமின்றி வெளிப்படுத்துவதையோ (outing), ஏளனம் செய்யப்படுவதையோ அல்லது ஆபத்துக்குள்ளாவதையோ தடுக்கின்றன—இது அறிமுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்முறை கொள்கைகளை நேரடியாக ஆதரிக்கிறது.

### சுருக்கம் — பாலியல் நோக்குநிலை மற்றும் பாலின அடையாளம் குறித்த அறிக்கையிடலுக்கான சரிபார்ப்புப் பட்டியல்

| | தவிர்க்கவும் | பயன்படுத்தவும் |
|---|---|---|
| 2.1 | எதிர்மறையான சூழல்களில் (குற்றம், விபத்துகள், மரணங்கள், ஊழல்கள்) மட்டும் LGBTQIA+ அடையாளத்தை முன்னிலைப்படுத்துதல். | பொருத்தமான சோதனை ஒன்றை மேற்கொள்ளவும்: ஒரு நிகழ்வை வாசகர்கள் புரிந்துகொள்வதற்கு அவசியமாகவும், தலையங்க ரீதியாக நியாயப்படுத்தப்படும் போது மட்டுமே அந்த அடையாளத்தைக் குறிப்பிடவும். |
| 2.2 | இழிவான சொற்கள், கேலி, அல்லது "இயல்புக்கு மாறான/சீர்கெட்ட" போன்ற பட்டப்பெயர்கள் (உதாரணமாக: அலி, பட்டாம்பூச்சி, இயல்புக்கு மாறான, இயற்கைக்கு மாறான, சீர்கெட்ட). | தொடர்புடைய போது துல்லியமான அடையாளச் சொற்களைப் பயன்படுத்தவும் (எ.கா., சங்க்ராந்திரிக சமூகபாவி நபர்/சங்கராந்திரிக பெண் / சங்ககாலப் பெண்/சமரிசி நபர்) அல்லது LGBTQIA+ அடையாளம் தொடர்புடையதாக இல்லாதபோது வெறுமனே நபர். |
| 2.3 | கேலிச்சித்திரங்கள், தூண்டக்கூடிய சிறுபடங்கள் (thumbnails) அல்லது அனுமதியின்றி அடையாளத்தை வெளிப்படுத்தும் தனிப்பட்ட சமூக ஊடகங்களின் ஸ்கிரீன்ஷாட்கள். | அடையாளத்தை வெளிப்படுத்தாமல் செய்தி நோக்கத்திற்குத் துணைபுரியும் காட்சிப்படிமங்களைப் பயன்படுத்தவும்; ஏளனம் செய்வதைத் தவிர்க்கவும்; சூழலுக்குப் பொருத்தமான அல்லது பொதுவான படங்களுக்கு முன்னுரிமை அளிக்கவும். |

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

# அத்தியாயம் 3: பாலியல் வன்முறை குறித்து அறிக்கையிடல்

பாலியல் வன்முறை குறித்து அறிக்கையிடல் என்பது இதழியலின் மிகவும் உணர்வுப்பூர்வமான பகுதிகளில் ஒன்றாகும். இக்குற்றங்கள் பாலின அடிப்படையிலான வன்முறை (GBV) எனும் பரந்த வகைக்குள் அடங்குகின்றன — இவை பெண்கள், பெண் குழந்தைகள் மற்றும் திருநங்கைகள், இடைப்பால் (intersex) நபர்கள் உள்ளிட்ட பாலினப் பன்முகத்தன்மை கொண்ட தனிநபர்களை விகிதாசாரத்திற்கு அதிகமாகப் பாதிக்கின்றன. வேரூன்றிய பாலின சமத்துவமின்மை, அதிகார ஏற்றத்தாழ்வுகள், கலாச்சார நெறிமுறைகள் மற்றும் சமூகக் களங்கம் ஆகியவை கூட்டு சேர்ந்து வன்முறைக்கான அபாயத்தை அதிகரிப்பதோடு, உயிர் பிழைத்தவர்கள் (survivors) அதன் பின்னர் அனுபவிக்கும் விளைவுகளையும் தீவிரப்படுத்துவதால் இந்த விகிதாசார வேறுபாடு நிலவுகிறது.[60]

இலங்கையில், பாலியல் குற்றங்களில் இருந்து உயிர் பிழைத்தவர்கள்/பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் கடுமையான சமூகத் தீர்ப்பு, துன்புறுத்தல் அல்லது சமூக ஆய்வுக்கு ஆளாகின்றனர். இது உயிர் பிழைத்தவர்கள் குழந்தைகளாக இருக்கும் சந்தர்ப்பங்களில் — குறிப்பாக பெண் குழந்தைகளாக இருக்கும்போது — இன்னும் அதிகமாகக் காணப்படுகிறது. பொறுப்பற்ற அறிக்கையிடலால் உயிர் பிழைத்தவர்களின் அடையாளம் மற்றும் உளவியல் நல்வாழ்வு கடுமையாகப் பாதிக்கப்படலாம். சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து அறிக்கையிடல் தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை வெளியிட்டுள்ள கையேடு, ஒரு குழந்தையின் அடையாளத்தை மறைமுகமாக வெளிப்படுத்துவது கூட, சமூகக் களங்கம், ஏளனம் அல்லது தனிமைப்படுத்தலைத் தூண்டி அவர்களை "மீண்டும் துஷ்பிரயோகம்" செய்வதற்குச் சமமாகும் என்றும், இது கடுமையான நீண்டகால உளவியல் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டுகிறது.[61]

**முக்கிய கொள்கை: தப்பிப் பிழைத்தவர்களை (survivors) கண்ணியத்துடனும் மரியாதையுடனும் சித்தரிக்கவும்.**

### 3.1 கலாச்சார ரீதியாக இயல்பானதாகக் கருதப்பட்டாலும், களங்கப்படுத்தும் அல்லது இழிவுபடுத்தும் சொற்களைத் தவிர்க்கவும்

பாலியல் வன்முறையானது பெரும்பாலும் உயிர் பிழைத்தவர் "அசுத்தமானவர்", "கௌரவம் இழந்தவர்" அல்லது ஏதோ ஒரு வகையில் நடந்த சம்பவத்திற்கு அவரே பொறுப்பாளி என்பது போன்ற தொனியைக் கொண்ட மொழியைப் பயன்படுத்திச் சித்தரிக்கப்படுகிறது. இந்தத் தீங்கு விளைவிக்கும் கருத்துக்கள் சமூகக் களங்கத்தில் ஆழமாக வேரூன்றியவையே தவிர, உண்மையை அடிப்படையாகக் கொண்டவை அல்ல. அறநெறி சார்ந்த இதழியல் இத்தகைய சித்தரிப்புகளை நிராகரிப்பதோடு, கண்ணியத்தையும் மனிதாபிமானத்தையும் பேணுகின்ற மொழியை உணர்வுபூர்வமாகப் பயன்படுத்துகிறது.[62]

சிங்கள அறிக்கையிடலில் பெரும்பாலும் 'தூஷணய' (දූෂණය – "மாசுபட்ட") மற்றும் 'கெலேஸீம' (කෙලෙසීම – "தீட்டுப்படுத்தப்பட்ட") போன்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை சமூகக் களங்கத்தைச் சுமப்பதோடு, குற்றவாளியின் குற்றவியல் மற்றும் நெறிமுறையற்ற செயல்களிலிருந்து கவனத்தைத் திசைதிருப்புகின்றன.

தண்டனைச் சட்டம் வன்புணர்வை வரையறுக்க "ஸ்த்ரீ தூஷணய" என்ற சொல்லைப் பயன்படுத்தினாலும், பொது அறிக்கையிடலில் அதே களங்கப்படுத்தும் மொழியை இதழியலாளர்கள் மீண்டும் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை. அவமானத்தை உறுதிப்படுத்தாமல், குற்றத்தைத் தெளிவாகவும் துல்லியமாகவும் விவரிக்கும் கலைச்சொற்களைப் பயன்படுத்துவதே தொழில்முறை அணுகுமுறையாகும்.

**நடைமுறைப்படுத்துவது எப்படி:**

- *உயிர் பிழைத்தவரை மையமாகக் கொண்ட கலைச்சொற்களைப் பயன்படுத்தவும்.*

60 Our Watch, <பாலின ஏற்றத்தாழ்வுக்கும் பெண்களுக்கு எதிரான வன்முறைக்கும் இடையிலான தொடர்பு> https://www.ourwatch.org.au/link-between-gender-inequality-and-violence 27 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

61 தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து அறிக்கையிடல்: ஊடகவியலாளர்களுக்கான கையேடு, (2012) https://childprotection.gov.lk/images/news/Reporting_on_Child_Abuse.pdf 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

62 'பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அல்லது குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளை அனுபவித்த தனிநபர்களை, படங்கள் உட்பட எதனிலுமே உதவியற்ற பாதிக்கப்பட்டவர்களாக சித்தரிக்க வேண்டாம். அதற்கு பதிலாக, அவர்கள் குரல் கொடுக்க முன்வந்த தப்பிப்பிழைத்தவர்கள் (survivors) என்பதைக் காட்டுங்கள்' UNICEF, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை குறித்த பொறுப்பான சித்தரிப்பு மற்றும் அறிக்கையிடலுக்கான வழிகாட்டுதல்கள் (2021) https://www.unicef.org/rosa/media/11631/file/Guidelines%20on%20Responsible%20representation%20and%20reporting%20of%20violence%20against%20women%20and%20violence%20against%20children.pdf 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

| தவிர்க்க வேண்டிய சொற்கள் | பயன்படுத்த வேண்டிய சொற்கள் |
|---|---|
| | **ලිංගික අපරාධ** / lingika aparadha (பாலியல் குற்றம்) — நடுநிலையான, குற்றத்தை மையமாகக் கொண்ட ஒரு பொதுவான சொல். |
| | **ලිංගික ප්‍රචණ්ඩත්වය**/ lingika prachandathwaya (பாலியல் வன்முறை) — பாலியல் குற்றங்களில் உள்ள கட்டாயத் தன்மை மற்றும் அதிகார ஏற்றத்தாழ்வை வலியுறுத்துகிறது. |
| **දූෂණය** / dooshanaya (“மாசுபட்ட”).<br><br>**කෙලෙසීම** / keleseema (“தீட்டுப்படுத்தப்பட்ட”).<br><br>உயிர் பிழைத்தவர் "கறைபடிந்தவர்", "பாழானவர்" அல்லது "அழிந்து போனவர்" என்று பொருள்படும் எந்தவொரு சொற்றொடரும். | **ලිංගික අතවර**/ lingika athawara (பாலியல் வன்கொடுமை / பாலியல் துஷ்பிரயோகம்) — ஒருவரது சம்மதமின்றி நிகழ்த்தப்படும் பல்வேறு பாலியல் செயல்களை உள்ளடக்கிய, பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் உயிர் பிழைத்தவர் மீது அக்கறை கொண்ட கலைச்சொல். |
| | **ලිංගික අඩන්තේට්ටම්**/ lingika adanthettam (பாலியல் துன்புறுத்தல் / வன்கொடுமை) — கடுமையான பாலியல் தவறான நடத்தை அல்லது துஷ்பிரயோகத்தைக் குறிக்கும் பொதுவாகப் புரிந்துகொள்ளப்படும் சொல்; சம்மதமற்ற பல்வேறு செயல்களுக்குப் பொருத்தமானது. |
| | **බලහත්කාර ලිංගික සංසර්ගය**/balahathkara lingika sansargaya (கட்டாயப் பாலியல் உறவு) — தீட்டுப்படுத்தப்படுவதைக் குறிக்காமல், சட்ட ரீதியாக விவரிக்கும் மற்றும் தெளிவற்ற தன்மையற்ற சொல். |

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

**அறிக்கையிடல் உதாரணங்கள்**

| தவிர்க்கவும் | பயன்படுத்தவும் |
| --- | --- |
| "අට හැවිරිදි දැරිය දූෂණය කල PCට වසර 14ක සිර දඬුවමක්."<br><br>(மொழிபெயர்ப்பு: "8 வயது சிறுமியை அசுத்தப்படுத்திய பொலிஸ் உத்தியோகத்தருக்கு 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை").[63] | "බාල වයස්කාර දැරියක ලිංගික අපයෝජනයට ලක් කල පොලිස් කොස්තාපල්ට වසර 14ක සිර දඬුවමක් නියම වී ඇති බව වාර්තා වේ."<br><br>(மொழிபெயர்ப்பு: "வயது குறைந்த சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு 14 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது"). |

**இது ஏன் முக்கியமானது:** மொழி பொதுமக்களின் பார்வையை வடிவமைக்கிறது. தப்பிப் பிழைத்தவரை மையமாகக் கொண்ட, தீர்ப்பு வழங்காத சொற்கள் சமூகக் களங்கத்திற்குச் சவால் விடுகின்றன; பொறுப்பை குற்றவாளியின் மீதே சுமத்துகின்றன; இச்செயலை ஒரு குற்றமாகப் பொதுமக்கள் புரிந்துகொள்வதற்குத் துணைபுரிகின்றன மற்றும் தப்பிப் பிழைத்தவர்கள் அவமானத்திற்கு அஞ்சாமல் நீதியைப் பெற ஊக்குவிக்கின்றன.

## 3.2 பாலியல் வன்முறையைச் சாதாரணமானதாகக் காட்டுவதையோ அல்லது பரபரப்பாக்குவதையோ தவிர்க்கவும்

நகைச்சுவையான சொற்றொடர்கள், சிலேடைப் பேச்சுகள், மறைமுகச் சொற்கள் (euphemisms) அல்லது மிகைப்படுத்தப்பட்ட சித்தரிப்புகள் பாலியல் வன்முறையின் தீவிரத்தைக் குறைத்துக் காட்டக்கூடும்.[64]

அவை தப்பிப் பிழைத்தவரின் நேர்மை குறித்து சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றன — இதனைச் சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த அறிக்கையிடல் வழிகாட்டுதல்கள் வன்மையாக எச்சரிக்கின்றன. "அறிக்கையிடலின் தொனி மற்றும் கட்டமைப்பு என்பது பாதிக்கப்பட்டவரை மீண்டும் துஷ்பிரயோகம் செய்வதற்குச் சமமாகும்" என்று அவை குறிப்பிடுகின்றன."[65]

சில உள்ளூர் ஊடக அறிக்கைகள் பாலியல் குற்றங்களை விவரிக்கும்போது சிலேடைப் பேச்சுகள் அல்லது மறைமுகச் சொற்களைப் பயன்படுத்துகின்றன. இவை செயலின் தீவிரத்தை மறைப்பதோடு, அங்கு ஒரு குற்றம் நடந்துள்ளது என்பதையும் மூடிமறைக்கின்றன.[66]

மற்றொரு சம்பவத்தில், ஒரு பாடிக் வடிவமைப்பாளர் மற்றும் ஆடை வடிவமைப்பு மாணவி சம்பந்தப்பட்ட செய்தியில், பாலியல் ரீதியான தீண்டலை விவரிப்பதற்குப் பதிலாக "අමුතු මෝස්තරයක් දාලා" ("வித்தியாசமான வடிவமைப்பை முயற்சித்தார்") என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டிருந்தது. [67]

**நடைமுறைப்படுத்துவது எப்படி:**

- *ஒரு குற்றத்தின் தீவிரத்தைக் குறைத்துக் காட்டும் மொழியைத் தவிர்க்கவும்.*

63 Ethics Eye, 'தீட்டுப்படுத்துதல் என்பதற்குப் பதிலாகப் பாலியல் துஷ்பிரயோகம்' (Verité Media, Facebook, 2 அக்டோபர் 2025) < www.facebook.com/share/p/17vALf-ciGb/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

64 ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP), பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த ஊடக அறிக்கையிடலுக்கான வழிகாட்டுதல்கள் (2021) < https://novinarkeprotivnasilja.org/wp-content/uploads/2021/12/Guidelines_WEB-VERSION-ENG.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது, 14.

65 தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து அறிக்கையிடல்: ஊடகவியலாளர்களுக்கான கையேடு, (2012) https://childprotection.gov.lk/images/news/Reporting_on_Child_Abuse.pdf 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

66 தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து அறிக்கையிடல்: ஊடகவியலாளர்களுக்கான கையேடு, (2012) https://childprotection.gov.lk/images/news/Reporting_on_Child_Abuse.pdf 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

67 Ethics Eye, 'இத்தகைய அறிக்கையிடலை நீங்கள் அங்கீகரிப்பீர்களா?' (Verité Media, Facebook, 1 ஏப்ரல் 2024) < www.facebook.com/share/p/17YnavUyam/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

**அறிக்கையிடல் உதாரணங்கள்**

## தவிர்க்கவும்

**“බස් රථ තුනකදී තරුණියකට හදි කළ අනංගයා පොලිසිය අසලදීම කොටු කර ගනී.”**

(மொழிபெயர்ப்பு: “மூன்று பேருந்துகளில் இளம் பெண்ணை வன்புணர்ந்த மன்மதன் பொலிஸ் நிலையத்திற்கு அருகிலேயே பிடிபட்டான்").[68]

## பயன்படுத்தவும்

**“බස් රථ තුනකදී තරුණියකට ලිංගික අතවර කළ සැකකරු පොලිසිය අසලදීම කොටු කර ගනී.”**

(மொழிபெயர்ப்பு: "மூன்று வெவ்வேறு பேருந்துகளில் இளம் பெண்ணொருவரை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கிய சந்தேக நபர் பொலிஸ் நிலையத்திற்கு அருகிலேயே கைது செய்யப்பட்டார்").

**இது ஏன் முக்கியமானது:** அலட்சியமான அல்லது சாதாரணமான மொழி யதார்த்தத்தைத் திரித்துக் காட்டுகிறது; அத்துடன் பாலியல் வன்முறை என்பது ஒரு சாதாரணமான விடயம் என எண்ணும் கலாச்சாரத்தை ஊக்குவிக்கிறது. தெளிவான, நேரடியான சொற்பிரயோகம் ஒரு குற்றத்தின் தீவிரத்தை வெளிப்படுத்துவதோடு, உயிர் பிழைத்தவர்களின் அனுபவங்களுக்கும் உரிய மரியாதையை வழங்குகிறது.

### 3.3 தப்பிப்பிழைத்தவரின் (survivor) அடையாளத்தைப் பாதுகாக்கவும்

அடையாளத்தைப் பாதுகாப்பது என்பது ஒரு சட்டரீதியான கடமையும் அறநெறிச் சார்ந்த அவசியமுமாகும். தற்செயலாக அடையாளம் வெளிப்படுத்தப்படுவது கூட துன்புறுத்தல், சமூகத் தனிமைப்படுத்தல் மற்றும் நீண்டகால உளவியல் பாதிப்புகளுக்கு வழிவகுக்கும்..[69]

68 Ethics Eye, ‘பாலியல் குற்றங்களைச் சாதாரணமானதாகக் காட்ட வேண்டாம்’ (Verité Media, Facebook, 17 செப்டம்பர் 2025) < www.facebook.com/share/p/1Czc-M1GKyd/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

69 ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP), பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த ஊடக அறிக்கையிடலுக்கான வழிகாட்டுதல்கள் (2021), 10 < https://novinarkeprotivnasilja.org/wp-content/uploads/2021/12/Guidelines_WEB-VERSION-ENG.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

## உங்களுக்குத் தெரியுமா? இலங்கையில் பாலியல் குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் அடையாளத்தை வெளிப்படுத்துவது ஒரு குற்றமாகும்

**இலங்கைத் தண்டனைச் சட்டத்தின் 365C பிரிவின்படி, பாலியல் துன்புறுத்தல், விபச்சாரத்திற்குத் தூண்டுதல், குழந்தைகளை பாலியல் ரீதியாகச் சுரண்டுதல், வன்புணர்வு, முறைதவறிய பாலியல் உறவு (incest), இயற்கை விதிகளுக்கு முரணான குற்றங்கள், நபர்களுக்கு இடையிலான அநாகரீகமான செயல்கள் அல்லது பாரிய பாலியல் வன்கொடுமை ஆகிய குற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்ட அல்லது உள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படும் எவரேனும் ஒருவரின் பெயரை அல்லது அவரது அடையாளத்தை வெளிப்படுத்தும் எந்தவொரு விடயத்தையும் அச்சிடுவது அல்லது வெளியிடுவது குற்றமாகும். இதற்கு இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இவை இரண்டும் தண்டனையாக விதிக்கப்படலாம்.**

**பின்வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே அடையாளத்தை வெளிப்படுத்த முடியும்:**

- **புலனாய்வு நோக்கங்களுக்காக ஒரு பொலிஸ் அதிகாரியால் அங்கீகரிக்கப்படும் போது.**
- **தப்பிப் பிழைத்தவர் எழுத்துப்பூர்வமான சம்மதத்தை வழங்கும் போது.**
- **பாதிக்கப்பட்டவர் உயிரிழந்திருந்தால், அவரது நெருங்கிய உறவினர் எழுத்துப்பூர்வமான சம்மதத்தை வழங்கும் போது.**
- **தப்பிப் பிழைத்தவர்/பாதிக்கப்பட்டவர் ஒரு குழந்தையாக அல்லது மனநிலை சரியில்லாதவராக இருந்தால், அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் எழுத்துப்பூர்வமான சம்மதத்தை வழங்கும் போது.**

**இக்குற்றங்கள் குறித்து சிக்கலான முறையில் அறிக்கையிடுவது புலனாய்வுச் செயல்முறைகளுக்குத் தடையாக அமைவதோடு, தப்பிப் பிழைத்தவர்களை/பாதிக்கப்பட்டவர்களை மீண்டும் மன உளைச்சலுக்கு உள்ளாக்கி, நீதி கிடைப்பதையும் தாமதப்படுத்தலாம். சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த அறிக்கையிடல் கையேடு, பாடசாலைப் பெயர்கள், கிராமங்கள், குடும்பத் தொழில் அல்லது வசிப்பிட விவரிப்புகள் போன்ற மறைமுகத் தகவல்கள் ("புதிர் அடையாளப்படுத்தல்" – jigsaw identification) மூலமாகவும் ஒரு குழந்தையை அடையாளம் காண முடியும் என்றும், இது அவர்களைச் சமூகக் களங்கத்திற்கும் பாதிப்பிற்கும் உள்ளாக்கும் என்றும் தெளிவாக எச்சரிக்கிறது.**

**நடைமுறைப்படுத்துவது எப்படி:**

- *குறிப்பாக சிறுவர்கள் தொடர்பான அறிக்கையிடலின் போது பெயர்கள், புகைப்படங்கள், பாடசாலைப் பெயர்கள், முகவரிகள், குடும்பத் தொழில்கள் அல்லது அடையாளம் காணக்கூடிய காட்சிப்படிமங்களை வெளியிட வேண்டாம்.*

**அறிக்கையிடல் உதாரணங்கள்**

| தவிர்க்கவும் | பயன்படுத்தவும் |
| --- | --- |
| “மெதிரிகிரியவில் தந்தை ஒருவர் தனது 14 வயது மகளை துஷ்பிரயோகம் செய்துள்ளார்” | "மெதிரிகிரியவில் நபர் ஒருவருக்கு வயது குறைந்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது". |

**இது ஏன் முக்கியமானது:** ஒருமுறை அடையாளம் வெளிப்படுத்தப்பட்டுவிட்டால், அதனால் ஏற்படும் பாதிப்பை சரிசெய்ய முடியாது. உயிர் பிழைத்தவர்கள் ஏளனம், சமூகக் களங்கம், சமூகத் தண்டனைகள் அல்லது வன்முறைகளைக்கூட சந்திக்க நேரிடலாம். அநாமதேயத்தைப் பேணுவது (அடையாளத்தை மறைப்பது) அவர்களின் பாதுகாப்பு, கண்ணியம் மற்றும் மீட்சி ஆகியவற்றைப் பாதுகாக்கிறது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

## 3.4 வெளிப்படையான விளக்கங்களைத் தவிர்க்கவும்; பொருத்தமான இடங்களில் தூண்டுதல் எச்சரிக்கைகளை (trigger warnings) பயன்படுத்தவும்

உடல் ரீதியான வன்முறையைத் தத்ரூபமாக விவரிப்பது தப்பிப் பிழைத்தவர்களை மீண்டும் அந்த மன உளைச்சலுக்கு உள்ளாக்கும்; அத்துடன் பொதுமக்களுக்கு, குறிப்பாகக் குழந்தைகள் அல்லது ஏற்கனவே இவ்வாறான பாதிப்புகளுக்கு உள்ளானவர்களுக்குப் பெரும் மனக் கலக்கத்தை ஏற்படுத்தும்.[70] இத்தகைய விவரங்கள் "குழந்தையின் மன வேதனையைச் சாதகமாக்கிக் கொள்வதோடு, மேலதிக பாதிப்புகளையும் ஏற்படுத்தக்கூடும்" என்று சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த அறிக்கையிடல் கையேடு எச்சரிக்கிறது.”[71]

**நடைமுறைப்படுத்துவது எப்படி:**

- *குற்றத்தை விவரிப்பதற்குப் போதுமான, ஆனால் வெளிப்படையான விவரங்கள் இல்லாத மொழியைப் பயன்படுத்தவும்.*
- *உடல் உறுப்புகள், அப்பட்டமான செயல்கள் அல்லது நாடகமாக்கப்பட்ட சாட்சி வாக்குமூலங்களை விவரிப்பதைத் தவிர்க்கவும்.*
- *பரபரப்பான விவரங்களில் கவனம் செலுத்தாமல், செயலின் குற்றத்தன்மை மீது மட்டும் கவனத்தைச் செலுத்தவும்.*
- *வாசகர்கள் அல்லது பார்வையாளர்கள் செய்தியைத் தொடர்ந்து பார்ப்பதா வேண்டாமா என்பதைத் தீர்மானிக்க ஏதுவாக, அறிக்கையிடலுக்கு முன்னதாகவே எச்சரிக்கை குறிப்பொன்றை (trigger warning) வழங்கவும்.*

**இது ஏன் முக்கியமானது:** அதிர்ச்சி-தகவல் அறிக்கையிடல் (trauma-informed reporting) வழிகாட்டுதல்கள், கவனக்குறைவான விவரங்கள் நேரடியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு மன வேதனையை அதிகப்படுத்தும் என்றும், செய்திகளைப் பார்க்கும் பொதுமக்களையும் எதிர்மறையாகப் பாதிக்கும் என்றும் வலியுறுத்துகின்றன.[72] எச்சரிக்கை குறிப்புகள் (trigger/content warnings) என்பவை பாதிப்பைக் குறைப்பதற்கான ஒரு நடைமுறைக் கருவியாகும்: அவை செய்தியின் தீவிரத்தைக் குறைப்பதில்லை, மாறாக ஊடகவியலாளரின் தொழில்முறைப் பொறுப்பை வெளிப்படுத்துவதோடு, மனக்கலக்கத்தை ஏற்படுத்தக்கூடிய விடயங்களை எப்போது, எப்படிப் பார்ப்பது என்பதைத் தீர்மானிக்கும் கட்டுப்பாட்டைப் பார்வையாளர்களுக்கு வழங்குகின்றன.[73]

## 3.5 பழி சுமத்துவதைத் தவிர்க்கவும் மற்றும் பொறுப்புக்கூறலை குற்றவாளியின் மீது நிலைநிறுத்தவும்

இலங்கை ஊடக அறிக்கையிடலில் பாதிக்கப்பட்டவர் மீது பழிசுமத்துவது (victim-blaming) பொதுவாகக் காணப்படுகிறது. இது ஆடை, நடத்தை, உறவுகள் அல்லது தனிப்பட்ட வரலாறு குறித்த கருத்துகளின் மூலம் நுட்பமான முறையில் நிகழலாம். இவ்வாறு பழிசுமத்துவது பாலியல் குற்றங்களால் உயிர் பிழைத்தவர்களுக்கு/பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவியல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், முறைப்பாடு செய்வதை ஊக்கமிழக்கச் செய்து நீதியைப் பெறுவதற்கும் தடையாக அமைகிறது.[74]

**நடைமுறைப்படுத்துவது எப்படி:**

70 UNICEF, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை குறித்த பொறுப்பான சித்தரிப்பு மற்றும் அறிக்கையிடலுக்கான வழிகாட்டுதல்கள் (2021), 16 https://www.unicef.org/rosa/media/11631/file/Guidelines%20on%20Responsible%20representation%20and%20reporting%20of%20violence%20against%20women%20and%20violence%20against%20children.pdf 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது; ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP), பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த ஊடக அறிக்கையிடலுக்கான வழிகாட்டுதல்கள் (2021), 17 < https://novinarkeprotivnasilja.org/wp-content/uploads/2021/12/Guidelines_WEB-VERSION-ENG.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

71 தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து அறிக்கையிடல்: ஊடகவியலாளர்களுக்கான கையேடு, (2012) https://childprotection.gov.lk/images/news/Reporting_on_Child_Abuse.pdf 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

72 72 Mental Health America, மனநலம் மற்றும் ஊடகம்: அதிர்ச்சி-தகவல் அறிக்கையிடல் வழிகாட்டி https://mhanational.org/resources/mental-health-and-media-trauma-informed-reporting-guide/ 27 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது. ஊடகவியல் மற்றும் அதிர்ச்சிக்கான உலகளாவிய மையம், அதிர்ச்சி-தகவல் ஊடகவியலுக்கான GCJT பாணி வழிகாட்டி (22 ஜூன் 2021) < https://gcjt.org/resources/gcjt-style-guide-trauma-informed-journalism> 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

73 மிச்சிகன் பல்கலைக்கழகம், உள்ளடக்க எச்சரிக்கைகள் மற்றும் தூண்டுதல் எச்சரிக்கைகள் குறித்த ஓர் அறிமுகம் (2020) <https://sites.lsa.umich.edu/equitable-teaching/wp-content/uploads/sites/853/2020/09/An-Introduction-to-Content-Warnings-and-Trigger-Warnings-PDF.pdf > 27 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

74 UNICEF, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை குறித்த பொறுப்பான சித்தரிப்பு மற்றும் அறிக்கையிடலுக்கான வழிகாட்டுதல்கள் (2021), 17 https://www.unicef.org/rosa/media/11631/file/Guidelines%20on%20Responsible%20representation%20and%20reporting%20of%20violence%20against%20women%20and%20violence%20against%20children.pdf 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது; ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP), பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த ஊடக அறிக்கையிடலுக்கான வழிகாட்டுதல்கள் (2021), 11 < https://novinarkeprotivnasilja.org/wp-content/uploads/2021/12/Guidelines_WEB-VERSION-ENG.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

- *குற்றவியல் பொறுப்புடன் எவ்வித தொடர்புமற்ற உயிர் பிழைத்தவரின் ஆடை அல்லது "தெரிவுகள்" குறித்த ஊகங்களைத் தவிர்க்கவும்.*

- *“වැරදි පාරේ ගිහින්” (தவறான பாதையில் சென்று) அல்லது “තහනම් ගහේ ගෙඩි කන්න ගිහින්” (விலக்கப்பட்ட கனியைப் புசித்து) போன்ற ஒழுக்கநெறி சார்ந்த சொற்றொடர்களைத் தவிர்க்கவும். இத்தகைய கட்டமைப்பானது, ஒரு குற்றத்தை சந்தேக நபரினால் இழைக்கப்பட்ட செயல் மற்றும் அதனால் ஏற்பட்ட பாதிப்பு எனப் பார்க்காமல், ஒரு நபரின் "சுபாவம்" அல்லது "தெரிவுகள்" பற்றிய கதையாக மாற்றுகிறது.*[75]

- *முன்னைய உறவுகள் இருந்தமையால் அங்கு சம்மதம் இருந்திருக்கும் என்று உணர்த்துவதைத் தவிர்க்கவும். முறையற்ற உறவு, விவாகரத்து, "பெற்றோர் இல்லாமை" அல்லது திருமண நிலை போன்ற விவரங்களை, ஒரு நபர் வன்முறையைத் தாமே "வரவழைத்துக் கொண்டார்" என்பதை உணர்த்துவதற்காகப் பயன்படுத்தக் கூடாது.*

- *வலுக்கட்டாயமான செயல் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இடங்களில் சந்தேகத்தை ஏற்படுத்தும் மொழியைத் தவிர்க்கவும். உ-ம்: "அவர்கள் காதலித்ததால், அது தெளிவற்றதாக உள்ளது..."*

- *பாலியல் செயல்களுக்கான சம்மதம் என்பது தன்னார்வமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருக்க வேண்டும் என்பதைத் தெளிவாக வலியுறுத்தவும்.*

- *சட்ட ரீதியாக மைனர்கள் (சிறுவர்கள்) பாலியல் செயல்பாடுகளுக்குச் சம்மதம் தெரிவிக்க முடியாது என்பதைத் தெளிவாக வலியுறுத்தவும். சிறுவர்கள் தொடர்பான அறிக்கையிடலின் போது, அதன் சட்டரீதியான தாக்கங்களைப் பிரதிபலிக்கும் வகையில் "ව්‍යවස්ථාපිත ලිංගික අපරාධ" (சட்டரீதியான கற்பழிப்பு - statutory rape) அல்லது "නීත්‍යානුකූල භාරකාරත්වයෙන් අපහරණය කිරීමක්" (சட்டபூர்வமான பாதுகாவலரிடமிருந்து கடத்தல் - kidnapping from lawful guardianship) போன்ற சட்டரீதியான துல்லியமான கலைச்சொற்களைப் பயன்படுத்தவும்*[76]

**அறிக்கையிடல் உதாரணங்கள்**

| தவிர்க்கவும் | பயன்படுத்தவும் |
| --- | --- |
| **“අවිවාහක කතක කෙලෙසූ PC වසර 7කට හිරේ”**<br><br>(மொழிபெயர்ப்பு: “திருமணமாகாத பெண்ணொருவரைச் சீரழித்த பொலிஸ் உத்தியோகத்தர் 7 ஆண்டுகள் சிறையில்”).[77] | **කාන්තාවක් ලිංගික අපරාධයකට ලක් කළ පොලිස් කොස්තාපල්වරයෙක් අත්අඩංගුවට.”**<br><br>(மொழிபெயர்ப்பு: "பெண்ணொருவருக்கு எதிராகப் பாலியல் குற்றமிழைத்த பொலிஸ் உத்தியோகத்தர் கைது"). |

75 தண்டனைச் சட்டக் கோவை (கட்டளைச் சட்டம் 1883 இன் இல. 2) (இலங்கை) பிரிவுகள் 352, 363(e) http://hrlibrary.umn.edu/research/srilanka/statutes/Penal_Code.pdf 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

76 தண்டனைச் சட்டக் கோவை (கட்டளைச் சட்டம் 1883 இன் இல. 2) (இலங்கை) பிரிவுகள் 352, 363(e) http://hrlibrary.umn.edu/research/srilanka/statutes/Penal_Code.pdf 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

77 Ethics Eye, '“தீட்டுப்படுத்தப்பட்ட” என்பது அவசியமா? “திருமணமாகாத” என்பது பொருத்தமானதா?' (Verité Media, Facebook, 20 பிப்ரவரி 2024), < www.facebook.com/share/p/16PuJveUZq/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

| தவிர்க்கவும் | பயன்படுத்தவும் |
| --- | --- |
| **"කනේ අමාරුවක් බව පවසා නිවසේ සිටි දැරිය මව එනවිට වැරදි පාරක ගිහින්."** (மொழிபெயர்ப்பு: "காது வலி என்று கூறி வீட்டில் இருந்த சிறுமி, தாய் திரும்பி வருவதற்குள் 'தவறான பாதையில்' சென்றுவிட்டாள்").[78] | **"බාල වයස්කාර දැරියක නීත්‍යානුකූල භාරකාරත්වයෙන් අපහරණය කළ සැකකරුවෙක් පොලීසිය විසින් සොයන බව වාර්තා වේ."** (மொழிபெயர்ப்பு: "சட்டபூர்வமான பாதுகாவலரிடமிருந்து மைனர் சிறுமி ஒருவரைக் கடத்திய சந்தேக நபரை பொலிஸார் தேடி வருவதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது"). |

**இது ஏன் முக்கியமானது:** பழிசுமத்தும் முறையிலான அறிக்கையிடல், பாலியல் வன்முறை குறித்த தொழில்முறை அறிக்கையிடலுக்கு இருக்கும் மிகப்பெரிய தடைகளில் ஒன்றாகும். அறநெறி சார்ந்த ஊடகவியல் என்பது சந்தேகம், சமூகக் களங்கம் மற்றும் ஒழுக்கத் தீர்ப்புகளை நீக்கி, பொறுப்பை அதற்குரிய இடத்தில் — அதாவது முழுமையாகக் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீதே சுமத்துகிறது.

## 3.6 தப்பிப்பிழைத்தவர்களை உதவியற்றவர்களாகச் சித்தரிப்பதைத் தவிர்க்கவும்

தப்பிப் பிழைத்தவர்கள் பெரும்பாலும் உடைந்தவர்களாக, குரலற்றவர்களாக அல்லது குற்றத்தால் மட்டுமே அடையாளப்படுத்தப்படுபவர்களாகச் சித்தரிக்கப்படுகிறார்கள். மயங்கி விழுதல், அழும் முகங்கள் அல்லது ஒரு நபரை ஒரு அதிர்ச்சிகரமான நிகழ்வாக மட்டுமே சுருக்கும் மொழி ஆகியவை அவர்களின் ஆளுமையைச் சிதைக்கக்கூடும்.

**நடைமுறைப்படுத்துவது எப்படி:**

- *உயிர் பிழைத்தவர்கள் புகார் அளிக்க எடுத்த முடிவுகள், உதவி கோருதல் அல்லது நீதியைப் பின்தொடர்தல் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தவும்*[79]
- *அவர்களைத் விரக்தியின் அடையாளங்களாகச் சுருக்கும் காட்சிப் படிமங்களைத் தவிர்க்கவும்.*

**இது ஏன் முக்கியமானது:** தப்பிப் பிழைத்தவர்களை மையமாகக் கொண்ட அறிக்கையிடல், அவர்களின் ஆளுமையை நீக்காமல் பாதிப்பை அங்கீகரிக்கிறது. இது பலவீனம் அல்லது வாழ்நாள் முழுமைக்கும் ஏற்பட்ட சேதம் போன்ற கதையாடல்களை வலுப்படுத்துவதைத் தவிர்க்கிறது.

78 Ethics Eye, 'தவறு வயது குறைந்த சிறுமியிடமா அல்லது இளைஞனிடமா?' (Verité Media, Facebook, 24 ஜனவரி 2025), < www.facebook.com/share/p/1Ai1PB9txd/ > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

79 UNICEF, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை குறித்த பொறுப்பான சித்தரிப்பு மற்றும் அறிக்கையிடலுக்கான வழிகாட்டுதல்கள் (2021), 17 https://www.unicef.org/rosa/media/11631/file/Guidelines%20on%20Responsible%20representation%20and%20reporting%20of%20violence%20against%20women%20and%20violence%20against%20children.pdf 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

## 3.7 பின்னணிச் சூழலை வழங்கவும் மற்றும் வாசகர்களை ஆதரவுச் சேவைகளுடன் இணைக்கவும்

பாலியல் குற்றங்கள் எப்போதாவது ஒருமுறை தற்செயலாக நடப்பவை அல்ல. அவை வறுமை, பாலியல் கல்வியின்மை, பலவீனமான சட்டப் பாதுகாப்பு, ஆணாதிக்க நெறிமுறைகள் மற்றும் குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பித்தல் போன்ற சமூகக் கட்டமைப்பு சார்ந்த சிக்கல்களின் பிரதிபலிப்பாகும்.[80] பொதுமக்களின் மனப்போக்கை உருவாக்குவதிலும், இத்தகைய பெரிய அளவிலான சமூகப் போக்குகளைப் பொதுமக்கள் புரிந்துகொள்ள உதவுவதிலும் ஊடகவியலாளர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

**நடைமுறைப்படுத்துவது எப்படி:**

- *சம்பவங்களைத் தனித்தனியான நிகழ்வுகளாகக் கருதாமல், அவற்றின் பின்னணியிலுள்ள சமூகக் காரணிகளை முன்னிலைப்படுத்தவும். உதாரணமாக, "14 வயதுச் சிறுமி கர்ப்பமானார்" என்று கூறுவதற்குப் பதிலாக, இளவயதுக் கர்ப்பம் என்பது எவ்வாறு ஒரு தொடர்ச்சியான சமூகப் பிரச்சினையாக இருக்கிறது, அதன் எதிர்மறையான விளைவுகள் மற்றும் அதைத் தடுப்பதற்கு என்ன செய்யலாம் என்பதைக் காட்டும் வகையில் செய்தியை வடிவமைக்கவும்.*

- *தெளிவான வழிகாட்டல்களை (calls to action) வழங்குவதோடு, உயிர் பிழைத்தவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஆதரவுச் சேவைகளை நோக்கி அவர்களை வழிநடத்தவும்.*

**உதவி பெறக்கூடிய தொலைபேசி எண்கள்**

- சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு – 1938
- பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் – 011 2826444 / 011 276 8076
- வுமன் இன் நீட் (Women In Need/ WIN) – 011 471 8585
- குடும்பத் திட்டமிடல் சங்கம் – 011 255 5455
- மா-செவன (சர்வோதயம்) – 011 265 5577

**இது ஏன் முக்கியமானது:** சூழலோடு கூடிய அறிக்கையிடல் பொதுமக்களின் புரிதலை மேம்படுத்துகிறது, சமூகக் களங்கங்களுக்குச் சவால் விடுக்கிறது மற்றும் தப்பிப் பிழைத்தவர்கள் குணமடையவும் நீதியைப் பெறவும் தேவையான ஆதரவுச் சேவைகளை நோக்கி அவர்களை வழிநடத்துகிறது.

80 ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP), பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த ஊடக அறிக்கையிடலுக்கான வழிகாட்டுதல்கள் (2021), 10 < https://novinarkeprotivnasilja.org/wp-content/uploads/2021/12/Guidelines_WEB-VERSION-ENG.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

## சுருக்கம் — பாலியல் வன்முறை குறித்து அறிக்கையிடலுக்கான சரிபார்ப்புப் பட்டியல்

| | தவிர்க்க வேண்டியவை | செய்ய வேண்டியவை |
|---|---|---|
| 3.1 | உயிர் பிழைத்தவர்கள் "தூய்மையற்றவர்கள்" அல்லது "கறைபடிந்தவர்கள்" என்று பொருள்படும் 'தூஷணயா' (dooshanaya - அசுத்தப்படுத்தப்பட்ட) அல்லது 'கெலேசீமா' (keleseema - சீரழிக்கப்பட்ட) போன்ற சமூகக் களங்கத்தை ஏற்படுத்தும் சொற்களைப் பயன்படுத்துதல். | பாலியல் வல்லுறவு அல்லது பாலியல் துஷ்பிரயோகம் ஆகியவற்றிற்கு 'லிங்கிக அபராத' (lingika aparadha - பாலியல் குற்றம்) போன்ற குற்றத்தை மையப்படுத்திய மற்றும் சட்டரீதியாக துல்லியமான கலைச்சொற்களைப் பயன்படுத்துதல். |
| 3.2 | பாலியல் குற்றங்களைக் குறைத்து மதிப்பிடும் வகையிலான 'அமுது பாடமக்' (amuthu padamak - "ஒரு விசித்திரமான பாடம்") அல்லது 'அமுது சாத்துவாக்' (amuthu saththuwak - "விசித்திரமான உபசரிப்பு") போன்ற மறைமுகமான சொற்கள், நகைச்சுவையான சொற்றொடர்கள் அல்லது தெளிவற்ற மொழியைப் பயன்படுத்துதல். | குற்றத்தின் தீவிரத்தைப் பிரதிபலிக்கும் தெளிவான, நேரடியான மொழியைப் பயன்படுத்துதல். |
| 3.3 | பெயர்கள், புகைப்படங்கள், பாடசாலைப் பெயர்கள், முகவரிகள், குடும்ப உறவுகள் அல்லது "ஜிப்சோ" (jigsaw) அடையாளப்படுத்தலுக்கு இட்டுச்செல்லக்கூடிய தகவல்களின் கூட்டினை வெளியிடுதல்.[81] | அநாமதேயத்தன்மையை முழுமையாகப் பாதுகாக்கவும்: அடையாளம் காணக்கூடிய எந்தவொரு விவரத்தையும் நீக்கவும் அல்லது பொதுமைப்படுத்தவும், குறிப்பாகச் சிறுவர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்களுக்குள் நடக்கும் பாலியல் வன்முறை (incest) தொடர்பான வழக்குகளில் இதனை உறுதிப்படுத்தவும். |
| 3.4 | தாக்குதல் பற்றிய தத்ரூபமான விவரங்கள், உடல் உறுப்புகள் பற்றிய வெளிப்படையான விவரிப்புகள் அல்லது நாடகமாக்கப்பட்ட சாட்சி வாக்குமூலங்களைச் சேர்த்தல். | குற்றச் செயலில் கவனம் செலுத்தி, தெளிவான ஆனால் ஆபாசமற்ற மொழியைப் பயன்படுத்தவும்; பாலியல் வன்முறை பற்றி விவாதிக்கும்போது எச்சரிக்கை குறிப்புகளை (trigger warnings) சேர்க்கவும். |

81 சுயாதீன ஊடகத் தரநிலைகள் அமைப்பு, 'பாலியல் குற்றங்கள்: ஊடகவியலாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான வழிகாட்டி' (ஜூலை 2023), < www.ipso.co.uk/wp-content/uploads/2024/04/sexual-offences-guidance-2023.pdf > 19 பிப்ரவரி 2026 அன்று பார்க்கப்பட்டது; 'ஒரே வெளியீட்டில் அல்லது வெவ்வேறு வெளியீடுகளில் வரும் பல்வேறு தகவல்களைக் கொண்டு, செய்திகளைப் பார்ப்பவர்கள் பாதிக்கப்பட்டவர் யார் என்பதைக் கண்டறியும் நிலை "ஜிக்சா அடையாளம் காணல்" (Jigsaw identification) எனப்படும்.'

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்

| | தவிர்க்க வேண்டியவை | செய்ய வேண்டியவை |
|---|---|---|
| 3.5 | தப்பிப் பிழைத்தவர்களின் உடை, நடத்தை, உறவுகள் அல்லது தனிப்பட்ட வரலாற்றின் அடிப்படையில் அவர்களைக் குற்றம் சாட்டுதல் அல்லது விமர்சித்தல். | பொறுப்பை முழுமையாகக் குற்றம் இழைத்தவர் மீதே சுமத்துங்கள்; சம்மதம் மற்றும் கட்டாயப்படுத்துதல் ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாட்டைத் தெளிவாகக் குறிப்பிடுங்கள், மேலும் வயது குறைந்தவர்கள் (minors) சட்டப்பூர்வமாகச் சம்மதம் தெரிவிக்க முடியாது என்பதை வலியுறுத்துங்கள். |
| 3.6 | தப்பிப் பிழைத்தவர்களை உதவியற்றவர்களாக, உடைந்தவர்களாக அல்லது குற்றத்தால் மட்டுமே அடையாளப்படுத்தப்படுபவர்களாகச் சித்தரித்தல் (அவர்கள் அழுவது அல்லது மயங்கி விழுவது போன்ற படங்களைச் சேர்ப்பது உட்பட). | உயிர் பிழைத்தவர்களைத் தங்களின் முடிவுகளைத் தாங்களே எடுக்கும் ஆளுமை கொண்டவர்களாகச் சித்தரித்தல் — அவர்களை உதவியற்றவர்களாகக் காட்டாமல் அவர்களின் வலிமை, குரல் மற்றும் மீண்டெழும் திறன் ஆகியவற்றை வெளிப்படுத்துதல். |
| 3.7 | இச்சம்பவத்தைத் தனிமைப்படுத்தப்பட்ட ஒரு நிகழ்வாகக் கருதுவது அல்லது ஆதரவுக்கான வழிகளைக் குறிப்பிடாமல் செய்தியை முடிப்பது. | பொருத்தமான இடங்களில் விரிவான சமூகப் பின்னணியை வழங்குவதோடு, உயிர் பிழைத்தவர்களுக்கான உதவி எண்கள் அல்லது ஆதரவுச் சேவைகளைச் சேர்க்கவும். |

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை © 2026 வெரிட்டே ரிசர்ச்



Supported by

Kingdom of the Netherlands

A | No. 165/1, Park Road, Colombo 5
T | +94 11-2055544
E | reception@veriteresearch.org
W | www.veriteresearch.org